
தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்

பள்ளிக் கல்வித்துறை,
செங்கல்பட்டு மாவட்டம்

12 ஆம் வகுப்பு

சுருக்கப்பட்ட சிறப்பு வழிகாட்டி கையேடு

தமிழ்



வெளியீடு
முதன்மைக்கல்வி
அலுவலர்,
செங்கல்பட்டு

ஆக்கம்

குழுத் தலைவர்

திருமதி இர. திருவளர்செல்வி,

முதன்மைக்கல்வி அலுவலர்,

செங்கல்பட்டு மாவட்டம்

திரு செ. விஜயன்,

மாவட்டக்கல்வி அலுவலர்(இடைநிலை)(பொறுப்பு),

மதுராந்தகம்.

கையேடு மேலாய்வாளர்கள்

திரு ஏ. ராஜேஷ்குமார்,
தலைமையாசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
அனந்தமங்கலம்,
செங்கல்பட்டு மாவட்டம்

திரு பொன். மணிமாறன்,
பள்ளித் துணை ஆய்வாளர்,
மதுராந்தகம்,
செங்கல்பட்டு மாவட்டம்

கையேடு குழு உறுப்பினர்கள்

திரு க. நடராஜன்,
முதுகலை ஆசிரியர் (தமிழ்),
அரசு மேனிலைப் பள்ளி,
தொழுப்பேடு,
செங்கல்பட்டு மாவட்டம்.

திரு பெ. கெங்கமுத்து,
முதுகலை ஆசிரியர் (தமிழ்),
அரசு மேனிலைப் பள்ளி,
கருங்குழி,
செங்கல்பட்டு மாவட்டம்

திருமதி ச. கௌரி,
முதுகலை ஆசிரியர் (தமிழ்),
அரசு மகளிர் மேனிலைப் பள்ளி,
அச்சிறுப்பாக்கம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

– குறள்.

அன்பார்ந்த மாணவர்களே!

1. உங்களின் இயல்பினை அறிந்து, அனைவரும் வெற்றி பெறும் நோக்குடன் எனது வழிகாட்டுதலின் பேரில் உருவாக்கப்பட்ட சிறப்பு வழிகாட்டி இது. இந்த வழிகாட்டி முழுமையும் படித்தால் நீங்கள் வெற்றி பெறுவது உறுதி.

2. படித்ததை எழுதிப் பழகுங்கள், மேலும் படித்த வினா விடைகளைச் சக மாணவர்களோடு கலந்து பேசி தெளிவாகுங்கள், வெற்றி எளிது...

3. முயன்றால் முடியாதது எதுவுமே இல்லை. உங்களால் முடியாதது வேறு எவராலும் முடியாது என்பதை உணருங்கள்.

4. நாளைய நாட்கள் உங்களுக்காகவே காத்திருக்கின்றன. இச்சிறப்பு வழிகாட்டி உங்களை வெற்றிக்கு அழைத்துச் செல்ல இருக்கிறது. கல்வியிலும், வாழக்கையிலும் வசந்தம் பெற வாழ்த்துக்கள்.....!

முதன்மைக்கல்வி அலுவலர்,
செங்கல்பட்டு.

ஒரு மதிப்பெண் வினாக்கள்.

வினா எண் 1 முதல் 14 வரை (இயல் 1–6)

1. ச.த. சற்குணரின் உரை ஏற்படுத்திய ஆர்வத்தினால் மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய நூல். (மார்ச்–2020, 2024)

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்

இ) சமணமும் தமிழும் ஈ) **கிறித்தவமும் தமிழும்**

2. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்குதற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம் என்பது:

1) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது

2) பொதிகையில் தோன்றியது

3) வள்ளல்களைத் தந்தது

அ) 1 மட்டும் சரி ஆ) 1, 2 இரண்டும் சரி இ) 3 மட்டும் சரி ஈ) **1, 3 இரண்டும் சரி**

3. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்" – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயங்களைத் தேர்க.

(மார்ச்–2024)

அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை

இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

4. "செம்பரிதி...." எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு.

அ) ஒளிப்பறவை **ஆ) நிலவுப்பூ** இ) சர்ப்பயாகம் ஈ) சூரியநிழல்

5. மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய சொல்லாய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு.

அ) மத்த விலாசம் ஆ) தமிழ்நாட்டு வரலாறு **இ) அஞ்சிறைத் தும்பி** ஈ) திசை எட்டும்

6. பொருத்துக:–

அ) குரங்குகள் – 1) கன்றுகளைத் தவிர்த்தன

ஆ) விலங்குகள் – 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன

இ) பறவைகள் – 3) குளிரால் நடுங்கின

ஈ) பசுக்கள் – 4) மேய்ச்சலை மறந்தன (மார்ச்–2024)

அ) 1, 3, 4, 2 **ஆ) 3, 4, 2, 1** இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

7. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்

இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

8. சென்னை வெறும் நகரம் மட்டுமன்று, அது நம்பிக்கை மையம் – காரணம். (மார்ச்–2024)

அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு

இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை **ஈ) அ, ஆ, இ – அனைத்தும்**

9. பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென – அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு (மார்ச்–2020)

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர் இ) இடைச்சொல் தொடர்

ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

10. கூற்று : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.

காரணம் : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி இ) கூற்று தவறு, காரணம் தவறு **ஈ) கூற்று சரி, காரணம் சரி**

11. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்

12. கடலின் பெரியது

அ) உற்ற காலத்தில் செய்த உதவி **ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி**

இ) திணையளவு செய்த உதவி

13. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்
கல்லார்க் கொன்றாகிய காரணம் – தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்.

அ) இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.

இ) ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந்து உறும்.

14. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளை எழுதுக.

உயர் அலுவலரின் வருகை
அலுவலகமே அல்லாடும்
அவருடைய சினம் அனைவரும் அறிந்ததே
கோப்புகளை விரைந்து முடிக்க
ஒழுங்கு செய்ய
நேரத்தில் இருக்க வேண்டும்
விரைகிறது மனம்
பரபரப்பும் மனவருத்தமுமாய்
வண்டியை எடுக்கிறேன்
காலைக் கட்டிக் கொள்கிறது குழந்தை
'போ அந்தப் பக்கம்'
உதறிச் செல்கிறேன் குழந்தையை.

அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

ஆ) செல்லிடத்துக் காப்பான் சினம் காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்.

இ) இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

15. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு?

அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி

இ) தினைத்துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி

16. பொருத்துக:– **(மார்ச்–2025)**

அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் – 1) சேர்ந்தாரைக் கொல்லி
ஆ) பயன்தூக்கார் செய்த உதவி – 2) ஞாலத்தின் மாணப் பெரிது
இ) சினம் – 3) தெய்வத்துள் வைக்கப்படும்
ஈ) காலத்தினாற் செய்த நன்றி – 4) நன்மை கடலின் பெரிது

அ) 4, 3, 2, 1 **ஆ) 3, 4, 1, 2** இ) 2, 1, 3, 4 ஈ) 3, 2, 4, 1

17. சொற்பொருளைக் கண்டறிந்து எழுதுக.

அ) வெகுளி : **சினம், கோபம்** ஆ) புணை : **தெப்பம்**

இ) ஏமம் : **பாதுகாப்பு** ஈ) திரு : **செல்வம்**

18. பொருத்துக.

அ) அன்பும் அறனும் – 1) பண்புத்தொகை
ஆ) நன்கலம் – 2) ஆகுபெயர்
இ) மறத்தல் – 3) எண்ணும்மை
ஈ) உலகு – 4) தொழிற்பெயர்

அ) 2, 1, 4, 3 **ஆ) 3, 1, 4, 2** இ) 4, 2, 3, 1 ஈ) 1, 4, 2, 3

19. செல்லிடத்து – புணர்ச்சி விதியை நிரப்புக.

செல் + இடத்து = விதி.1: தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.

(செல்ல்+இடத்து) = விதி.2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

செல்லிடத்து

20. பகையும் உளவோ பிற? – பொருளை எழுதுக.

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தைவிட வேறு பகை இல்லை.

21. 'குடும்பம்' என்னும் சொல் முதன்முதலில் இடம்பெற்றுள்ள நூல்–(2026)

அ) தொல்காப்பியம் **ஆ) திருக்குறள்** இ) குறுந்தொகை ஈ) புறநானூறு

22. பொருத்தி விடையைத் தேர்ந்தெடுக்க.

அ) செற்றார் – 1. மகிழ்ச்சி
ஆ) கிளை – 2. காடு
இ) உவகை – 3. பகைவர்
ஈ) கானம் – 4. உறவினர்

அ) 2, 4, 3, 1 **ஆ) 3, 4, 1, 2** இ) 2, 4, 1, 3 ஈ) 3, 2, 4, 1

23. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது _____.

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை **ஈ) இவை அனைத்தும்**

24. "தந்தனன் தாதை தன்னைத் **தடக்கையான்** எடுத்துச் சார்வான்" – அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு _____

அ) உரிச்சொல் தொடர் ஆ) வினைத்தொகை

இ) உம்மைத்தொகை ஈ) இடைச்சொல் தொடர்

25. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" – என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது ____. (மார்ச்–2025)

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை

இ) தாய்வழிச் சமூகமுறை **ஈ) தந்தைவழிச் சமூகமுறை**

26. 'கண்ணாடியாகும் கண்கள்' என்னும் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்

அ) நகுலன் ஆ) பிரமிள் இ) அய்யப்ப மாதவன் ஈ) சிற்பி

27. "ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில்
சூழ்கழல் மன்னற்குக் காட்டல்....." தொடர்களில் வெளிப்படும் செய்திகள்.
1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.
2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள். (மார்ச்–2024)

அ) 1 சரி; 2 தவறு ஆ) 1 தவறு; 2 சரி இ) 1 தவறு; 2 தவறு **ஈ) 1 சரி; 2 சரி**

28. பொருந்தி விடை தேர்க.

அ) ஆமந்திரிகை – 1) முத்து
ஆ) நித்திலம் – 2) மூங்கில்
இ) கழுஞ்சு – 3) இடக்கை வாத்தியம்
ஈ) கழை – 4) எடை அளவு

அ) 3, 1, 4, 2 ஆ) 4, 2, 1, 4 இ) 1, 2, 3, 4 ஈ) 4, 3, 2, 1


29. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க: (மார்ச்–2024,2026)

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு **இ) கடுக்காய்** ஈ) மாவிலைக்கரி

30. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்? (ஜூன்–2024)

அ) இலக்கியம் **ஆ) கணிதம்** இ) புவியியல் ஈ) வேளாண்மை

31. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.(2026)



அ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

**ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.**

இ) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற

32. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.

மனமோ மாட்டுவண்டி
பாதையொழுங்கில் போக நினைக்கும் மாடு
இப்படி இருந்தால் எப்படி நகரும்
வாழ்க்கைச் சக்கரம்
ஊர்போகும் பாதையில்
சக்கரம் உருண்டால்
அதுவே அறிவு அதுவே தெளிவு

அ) எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

ஆ) சென்ற இடத்தால் செலவிடா தொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

இ) எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

33. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.
சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோல் மாண்ட பயத்ததாம்–மாரி
வறந்தக்கால் போலுமே வாலருவி நாட!
சிறந்தக்கால் சீரியார் நட்பு.

அ) பகையாய் எனக்குருதிப் பண்பு அல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.

ஆ) எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

இ) நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

34. அல்லல் படுப்பதூஉம் இல் – எவரோடு பழகினால்?
அ) வாள் போல் பகைவர் ஆ) மெய்பொருள் காண்பவர்
இ) எண்ணியாங்கு எய்துபவன் **ஈ) தீயினத்தார்**

35. திண்ணியர் என்பதன் பொருள் (ஜூன்–2024)
அ) அறிவுடையவர் **ஆ) மன உறுதியுடையவர்** இ) தீக்காய்பவர் ஈ) அறிவிலார்

36. ஆராய்ந்து சொல்கிறவன்.
அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவன் **இ) தூதுவர்** ஈ) உறவினர்

37. பொருத்துக:

அ) பாம்போடு உடன் உறைந்தற்று	– 1) தீக்காய்வார்
ஆ) செத்தார்	– 2) சீர் அழிக்கும் சூது
இ) வறுமை தருவது	– 3) கள் உண்பவர்
ஈ) இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார்	– 4) உடம்பாடு இல்லாதவரோடு வாழ்தல்

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 3, 4, 1 இ) 4, 1, 3, 2 **ஈ) 4, 3, 2, 1**

38. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்
அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக்கொள்ளக் கூடியவர்
ஆ) மனத்திட்பம் உடையவர் இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்
ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்

39. எளியது, அரியது என்பன _____. (மார்ச்–2023, 2024)
அ) தீயினத்தின் துணை–நல்லினத்தின் துணை
ஆ) சொல்வது – சொல்லியபடி செய்வது
இ) சிறுமை பல செய்வது–பகைவர் தொடர்பு
ஈ) மெய்ப்பொருள் காண்பது–உருவுகண்டு எள்ளாதது

40. திரைப்படத்தில் கதையும் சொல்லலாம் என்பதை முதன்முதலில் நிகழ்த்திக் காட்டியவர் _____.
அ) லூமியர் சகோதரர்கள் **ஆ) ஜார்ஜ் மிலி**
இ) தாமஸ் ஆல்வா எடிசன் ஈ) சாமிக்கண்ணு வின்சென்ட்

41. 'மனித குலத்திற்குத் தேவை போரல்ல; நல்லுணர்வும் அன்புந்தான்' என்பதை மையக்கருவாகக் கொண்ட சார்லி சாப்ளினின் திரைப்படம் _____

அ) தி கிட் ஆ) தி சர்க்கஸ் இ) தி கோல்டு ரஷ் **ஈ) தி கிரேட் டிக்டேட்டர்**

42. மாசித் திங்களில் நிகழும் விழாவாக மயிலைப் பதிகம் சுட்டுவது _____

அ) விளக்குத் திருவிழா ஆ) ஓண விழா

இ) கடலாட்டு விழா ஈ) திருவாதிரை விழா

43. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' – இத்தொடர் உணர்த்தும் பண்பு (ஜூன்–2024)

அ) நேர்மறைப் பண்பு ஆ) நுட்பப் பண்பு **இ) முரண்பண்பு** ஈ) இவை அனைத்தும்

44. "வாளால் அறுத்துச் சுடினும்...." – இவ்வடியின் மூலம் குலசேகராழ்வார் வெளிப்படுத்துவது ___.

அ) போர் **ஆ) மருத்துவம்** இ) விளையாட்டு ஈ) வேளாண்மை

45. 'ஏற்ற காலத்தை அறிந்து ஏற்ற இடத்தையும் தெரிந்து ஒரு செயலை மேற்கொண்டால் உலகத்தையே அடைய நினைத்தாலும் கைகூடும்' என்று திருவள்ளுவர் குறிப்பிடும் அதிகாரம்.

அ) ஊக்கமுடைமை **ஆ) காலமறிதல்** இ) அறிவுடைமை ஈ) செங்கோன்மை

46. 'பில்கிரிம்ஸ் புராகிரஸ்' (Pilgrim's Progress) என்னும் ஆங்கில நூலின் தழுவல் நூல் எது?

அ) தேம்பாவணி ஆ) இயேசு காவியம் **இ) இரட்சணிய யாத்திரிகம்**

ஈ) இரட்சணிய மனோகரம்

47. 'கிறித்துவக் கம்பர்' என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) கால்டுவெல் ஆ) ஜி.யு.போப் இ) வேதநாயகர் **ஈ) எச்.ஏ. கிருட்டிணனார்**

48. புறநானூற்றை முதன்முதலாக அச்சில் பதிப்பித்தவர் _____

அ) உ.வே. சாமிநாதர் ஆ) மாயூரம் தேவநாயகம்

இ) மா. இராசமாணிக்கனார் ஈ) சி.வை. தாமோதரனார்

49. சோழநாட்டில் இறக்குமதிப் பொருள்களுக்குச் சுங்கம் வசூலித்த செய்தியைக் கூறும் நூல்?

அ) பதிற்றுப்பத்து **ஆ) பட்டினப்பாலை** இ) மலைபடுகடாம் ஈ) நெடுநல்வாடை

இலக்கணத் தேர்ச்சிகொள் பகுதி ஒரு மதிப்பெண் (இயல் 1–6)

1. பிழையான தொடரைக் கண்டறிக. (ஆகஸ்ட்–2022, மார்ச்–2024, மார்ச்–2026)

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை மணம் வீசியது.

ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

2. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க. (ஆகஸ்ட்–2022)

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.

ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

3. தமிழில் திணைப்பாகுபாடு _____ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது. (ஆகஸ்ட்–2021, மே–2022)

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

4. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே" – இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்.... (மார்ச்–2025)

அ) நன்னூல் ஆ) அகத்தியம் **இ) தொல்காப்பியம்** ஈ) இலக்கண விளக்கம்

5. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே... **(ஆகஸ்ட்–2022, ஜூன்–2024)**

அ) அஃறிணை, உயர்திணை **ஆ) உயர்திணை, அஃறிணை**

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

6. பொருத்தி விடை தேர்க.

அ) அவன் அவள் அவர் – 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் – 2) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) நாம் முயற்சி செய்வோம் – 3) தன்மைப் பன்மைப் பெயர்கள்

ஈ) நாங்கள், நாம் – 4) பதிலீட்டுப் பெயர்கள்

அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 1, 2

7. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தோர்க.

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்.

ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்.

இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்.

ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்.

8. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.

அ) பாலை பாடினான் – 1) தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்

ஆ) பாலைப் பாடினான் – 2) தேரினைப் பார்த்தான்

இ) தேரை பார்த்தான் – 3) பாலினைப் பாடினான்

ஈ) தேரைப் பார்த்தான் – 4) பாலைத் திணை பாடினான்

அ) 4, 1, 3, 2 ஆ) 2, 3, 1, 4 **இ) 4, 3, 1, 2** ஈ) 2, 4, 1, 3

9. கல்வியை நிலைக்களனாகக் கொண்ட மெய்ப்பாடு.

அ) பெருமிதம் ஆ) உவகை இ) நகை ஈ) மருட்கை

10. 'நகை' என்னும் மெய்ப்பாடு தோன்றும் நிலைக்களன்களுள் ஒன்று.

அ) கொடை ஆ) பிணி **இ) பேதைமை** ஈ) செல்வம்

11. ஒட்டுப் போடாத

ஆகாயம் போல – இந்த

உலகமும் ஒன்றேதான் – இக்கவிதையில் பயின்றுவருவது.

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

12. 'ஐம்பெருங்காப்பியம்' என்னும் சொற்றொடரை நூல் உரையில் குறிப்பிட்டவர்.

அ) சிவஞான முனிவர் **ஆ) மயிலைநாதர்** இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்

13. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.

அ) காதை – 1) கந்தபுராணம்

ஆ) சருக்கம் – 2) சீவகசிந்தாமணி

இ) இலம்பகம் 3) சூளாமணி

ஈ) படலம் – 4) சிலப்பதிகாரம்

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 3, 4, 2, 1 ஈ) 4, 3, 1, 2

14.பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தாத ஒன்றைத் தேர்க. **(மார்ச்–2025)**

அ) கர்ணன் தோற்றான் போ **ஆ) வயதில் சிறியவர், ஆனாலும் தலைவர்!**

இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு ஈ) இந்தா போறான் தருமன்

15.தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.

அ) உருவாக்கப்பட்டு இறுகி விட்ட வடிவங்கள்.

ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது.

இ) நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்.

ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது.

16. 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர். **(ஜூன்–2023, மார்ச்–2026)**

அ) கு. அழகிரிசாமி **ஆ) புதுமைப்பித்தன்**

இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

17. பண்புக்குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக.

அ) அறம் – 1) கர்ணன்

ஆ) வலிமை – 2) மனுநீதிச்சோழன்

இ) நீதி – 3) பீமன்

ஈ) வள்ளல் – 4) தருமன்

அ) 3, 2, 1, 4 **ஆ) 4, 3, 2, 1** இ) 2, 4, 3, 1 ஈ) 4, 3, 1, 2

2 மதிப்பெண் வினாக்கள் (குறுவினா)

இலக்கணத் தேர்ச்சி கொள்:

1. **முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்க.**
   - உன்னால் **முடிந்தால்** அடுத்தவருக்கு உதவி செய்யலாம்.
   - வேலையை **முடித்தால்** கூலி தரலாம்.

2. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?

1. எழுத்தினை தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும்.
2. வேகமாக எழுதினால் பிழை ஏற்படும்.
3. எழுத்துகளை எழுதப் பழகும் போது வாய்விட்டோ மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதவேண்டும்.

3. மொழியின் சொற்றொடர் அமைப்பினை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன யாவை?

திணை, பால், எண், இடம்.

4. உயர்திணைப் பன்மைப் பெயர்கள் பன்மை விகுதி பெற்று வருமாறு விளக்குக.

- பெண்கள் வரிசையில் வந்தனர்.
- மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர்.

5. வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்து தொடரமைக்க.

- மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.
- **மாணவர்கள்வரிசையில், நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.**

6. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.

முன்: அவன் **முன்வந்து** கூறினான்.
அவன்முன் வந்து கூறினான்.

தானே: கண்ணன் தானே எழுதுவதாகக் கூறினான்.
கண்ணன்தானே எழுதுவதாகக் கூறினான்.

கொண்டு: பிரித்து கொண்டு வந்தான்.
பிரித்துக்கொண்டு வந்தான்.

விட்டான்: மீனைப் பிடித்துவிட்டான்.
மீனைப்பிடித்து விட்டான்.

7. காற்புள்ளி இடாமல் எழுதுவதினால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.

1. அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்.

2. அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்.

8. சல சல வந்து வந்து கல கல விம்மி விம்மி – இவற்றில் இரட்டைக்கிளவித் தொடர்களை எழுதி அவற்றை எழுதும் முறையைக் கூறுக.

இரட்டைக்கிளவிச் சொற்கள்: கலகல, சலசல

விதி: இரட்டைக் கிளவிச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.

9. திருவளர்ச் செல்வன், திருவளர் செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி

திருவளர்செல்வன் என்பதே சரியான தொடர். வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

10. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன எண்வகை மெய்ப்பாடுகள் ஆகும்.

11. மருட்கை என்னும் மெய்ப்பாடு தோன்றும் நிலைக்களன்கள் யாவை?

புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம்.

12. உவமை எவற்றின் அடிப்படையில் தோன்றும்?

வினை, பயன், மெய், உரு.

13. காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

காப்பியம் இரண்டு வகைப்படும்.

1. பெருங்காப்பியம்

2. சிறுகாப்பியம்

14. காப்பியத்தின் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக.

காதை, சருக்கம், இலம்பகம், படலம்.

15. பாவிகம் – விளக்குக.

பாவிகம் என்பது, காப்பியப் பண்பு. கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தினையே பாவிகம் என்பர்.

16. தொன்மம் – விளக்குக.

தொன்மம் என்றால் புராணம், பழங்கதை என்று பொருள்.

கலைச்சொற்கள்இலக்கணக் குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம் & புணர்ச்சி விதிகள் – (இயல் 1 – 6)

1. கலைச்சொற்கள் – இயல் (1–6)

Anthropology	மானுடவியல்	Fine Arts	கவின்கலைகள்
Archaeology	தொல்லியல்	Field Study	கள ஆய்வு
Research	ஆராய்ச்சி	Epigraphy	கல்வெட்டியல்
Museum	அருங்காட்சியகம்	Hardware	வன்பொருள்
Archive	ஆவணக்காப்பகம்	Software	மென்பொருள்
Nuclear family	தனிக்குடும்பம்	Culture	பண்பாடு

Matriarchy	தாய்வழிச்சமூகம்	Habitat	வாழிடம்
Discussion	கலந்துரையாடல்	Road Safety	சாலைப் பாதுகாப்பு
Higher Education	உயர்கல்வி	Traffic Signal	போக்குவரத்துச் சமிக்ஞை
Value Education	மதிப்புக்கல்வி	Vice Chancellor	துணைவேந்தர்
Artist (March25)	கவின்கலைஞர்	Cinematography	ஒளிப்பதிவு
Animation	அசைவூட்டப் படம்	Sound Effect	ஒலிவிளைவு
Newsreel	செய்திப்படம்	Multiplex Complex	ஒருங்கிணைந்த வளாகம்
Business Management	வணிக மேலாண்மை	Customs Officer	சுங்க அதிகாரி
Mission	குறிக்கோள் பயணம்	Emotion	மனவெழுச்சி

2. இலக்கணக் குறிப்பு – இயல் (1–6)

செந்தமிழ், செந்நிறம், செம்பரிதி, வெங்கதிர்	பண்புத்தொகைகள்
சிவந்து	வினையெச்சம்
வியர்வைவெள்ளம்	உருவகம்
முத்துமுத்தாய்	அடுக்குத்தொடர்
உயர்ந்தோர்	வினையாலணையும் பெயர்
இலாத	இல்லாத என்பதன் இடைக்குறை
வளைஇ	சொல்லிசை அளபெடை
பொய்யா	ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
புதுப்பெயல், கொடுங்கோல்	பண்புத்தொகைகள் (ஜூன்–2024)
உளது	உள்ளது என்பதன் இடைக்குறை
செற்றவர்	வினையாலணையும் பெயர்
நுந்தை	நும் தந்தை என்பதன் மரூஉ
ஆடலும் பாடலும்	எண்ணும்மை
தொல்நெறி	பண்புத்தொகை
மலரடி	உவமைத்தொகை
வளர்தலம்	வினைத்தொகை
மாமயிலை	உரிச்சொற்றொடர்
வெங்குருநதி	பண்புத்தொகை
வெந்து, சிவந்து, போந்து	வினையெச்சங்கள்
உன்னலிர்	முன்னிலைப் பன்மை வினைமுற்று
ஓர்மின்	ஏவல் பன்மை வினைமுற்று
சொற்ற, திருந்திய	பெயரெச்சங்கள்
பாதகர்	வினையாலணையும் பெயர்
ஊன்ற ஊன்ற	அடுக்குத் தொடர்
அம்ம	அசைநிலை
உண்டல், துஞ்சல்	தொழிற்பெயர்கள்
முயலா	ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

3. பகுபத உறுப்பிலக்கணம் – இயல் (1–6)

சாய்ப்பான் = சாய் + ப் + ப் + ஆன்	சாய்–பகுதி ப்–சந்தி ப்–எதிர்கால இடைநிலை ஆன்–படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி
விம்முகின்ற = விம்மு + கின்று + அ	விம்மு–பகுதி கின்ற–நிகழ்கால இடைநிலை அ–பெயரெச்ச விகுதி
வியந்து = விய + த்(ந்) + த் + உ	விய–பகுதி த்–சந்தி (ந் விகாரம்) த்–இறந்தகால இடைநிலை உ–வினையெச்ச விகுதி
இருந்தாய் = இரு + த்(ந்) + த் + ஆய்	இரு–பகுதி த்–சந்தி (ந் விகாரம்) த்–இறந்தகால இடைநிலை ஆய்–முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி
உயர்ந்தோர் = உயர் + த்(ந்) + த் + ஓர்	உயர்–பகுதி த்–சந்தி (ந் விகாரம்) த்–இறந்தகால இடைநிலை ஓர்–பலர்பால் வினைமுற்று விகுதி
வந்து = வா(வ) + த்(ந்) + த் + உ	வா–பகுதி (வ–குறுகியது விகாரம்) த்–சந்தி (ந் விகாரம்) த்–இறந்தகால இடைநிலை உ–வினையெச்ச விகுதி
விளங்கி = விளங்கு+இ கலங்கி=**கலங்கு + இ**	விளங்கு–பகுதி இ–வினையெச்ச விகுதி (மார்ச்–2024) கலங்கு–பகுதி இ–வினையெச்ச விகுதி.
தந்தனன் = தா(த) + த்(ந்) + த் + அன் + அன்	தா–பகுதி (த–குறுகியது விகாரம்) த்–சந்தி (ந் விகாரம்) த்–இறந்தகால இடைநிலை அன்–சாரியை அன்–ஆண்பால் வினைமுற்று விகுதி
பொலிந்தான் = பொலி + த்(ந்) + த் + ஆன்	பொலி–பகுதி; த்–சந்தி; (ந் விகாரம்) த்–இறந்தகால இடைநிலை ஆன்–ஆண்பால் வினைமுற்று விகுதி (மார்ச்–2025)
தொழுதனர் = தொழு + த் + அன் + அர்	தொழு–பகுதி த்–இறந்தகால இடைநிலை அன்–சாரியை அர்–பலர்பால் வினைமுற்று விகுதி
நினைக்கின்ற = நினை + க் + கின்று + அ	நினை–பகுதி க்–சந்தி

	கின்று–நிகழ்கால இடைநிலை அ–பெயரெச்ச விகுதி
வைத்து = வை + த் + த் + உ	வை–பகுதி த்–சந்தி த்–இறந்தகால இடைநிலை உ–வினையெச்ச விகுதி
பேசுவார் = பேசு + வ் + ஆர்	பேசு–பகுதி வ்–எதிர்கால இடைநிலை ஆர்–பலர்பால் வினைமுற்று விகுதி
கண்டான் = காண்(கண்) + ட் + ஆன்	காண்–பகுதி (கண்–குறுகியது விகாரம்) ட்–இறந்தகால இடைநிலை ஆன்–ஆண்பால் வினைமுற்று விகுதி
அமர்ந்தான் = அமர் + த்(ந்) + த் + ஆன்	அமர்–பகுதி த்–சந்தி (ந் விகாரம்) த்–இறந்தகால இடைநிலை ஆன்–ஆண்பால் வினைமுற்று விகுதி
பகைத்த = பகை + த்+ த் + அ	பகை–பகுதி த்–சந்தி த்–இறந்தகால இடைநிலை அ–பெயரெச்ச விகுதி
களைந்து = களை + த்(ந்) + த் + உ	களை–பகுதி த்–சந்தி (ந் விகாரம்) த்–இறந்தகால இடைநிலை உ–வினையெச்ச விகுதி
பழித்தனர் = பழி + த் + த் + அன் + அர்	பழி–பகுதி; த்–சந்தி; த்–இறந்தகால இடைநிலை அன்–சாரியை அர்–பலர்பால் வினைமுற்று விகுதி
இடிந்து = இடி + த்(ந்) + த் + உ	இடி–பகுதி த்–சந்தி (ந் விகாரம்) த்–இறந்தகால இடைநிலை உ–வினையெச்ச விகுதி
துஞ்சல் = துஞ்சு + அல்	துஞ்சு–பகுதி அல்–தொழிற்பெயர் விகுதி
முனிவிலர் = முனி + வ் + இல் + ஆர்	முனி–பகுதி வ்–உடம்படுமெய் சந்தி இல்–எதிர்மறை இடைநிலை ஆர்–பலர்பால் வினைமுற்று விகுதி

4. புணர்ச்சி விதி – இயல் (1–6)

செம்பரிதி = செம்மை + பரிதி	ஈறுபோதல் ('மை' கெட்டது) → செம்பரிதி.

வானமெல்லாம் = வாணம் + எல்லாம்	உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (ம்+எ=மெ) → வானமெல்லாம்.
உன்னையல்லால் = உன்னை + அல்லால்	1. இஈஐ வழி யவ்வும் (உன்னை+ய்+அல்லால்) 2. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (ய்+அ=ய) → உன்னையல்லால்.
செந்தமிழே = செம்மை + தமிழே	1. ஈறுபோதல் ('மை' கெட்டது) | 2. முன்னின்ற மெய் திரிதல் (ம்→ந்) → செந்தமிழே. (மார்ச்–20, ஜூன்–24)
ஆங்கவற்றுள் = ஆங்கு + அவற்றுள்	1. உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் (க்+ உ)\ 2. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (க்+அ=க) → ஆங்கவற்றுள்.
தனியாழி = தனி + ஆழி	1. இஈஐ வழி யவ்வும் (தனி+ய்+ஆழி) | 2. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (ய்+ஆ=யா) → தனியாழி.
வெங்கதிர் = வெம்மை + கதிர்	1. ஈறுபோதல் ('மை' கெட்டது) | 2. முன்னின்ற மெய் திரிதல் (ம்→ங்) → வெங்கதிர்.
இனநிரை = இனம் + நிரை	மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் → இனநிரை.
புதுப்பெயல் = புதுமை + பெயல்	1. ஈறுபோதல் ('மை' கெட்டது) | 2. இயல்பினும் விதியினும் நின்ற உயிர்மூன் கசதப மிகும் (+ப்) → புதுப்பெயல்.
அருங்கானம் = அருமை + கானம்	1. ஈறுபோதல் ('மை' கெட்டது) 2. இனமிகல் (+ங்) → அருங்கானம். (மார்ச்–2025)
எத்திசை = எ + திசை	இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் (+த்) → எத்திசை. (மார்ச்–20, 24, ஜூன்–24)
உள்ளொன்று = உள் + ஒன்று	1. தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும் (உள்ள்+ஒன்று) 2. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (ள்+ஒ=ளொ) → உள்ளொன்று.
ஒருமையுடன் = ஒருமை + உடன்	1. இஈஐ வழி யவ்வும் (ஒருமை+ய்+உடன்) 2. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (ய்+உ=யு) → ஒருமையுடன்.
பூம்பாவாய் = பூ + பாவாய்	பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும் (+ம்) → பூம்பாவாய். (மே–2022)
ஏழையென = ஏழை + என	1. இஈஐ வழி யவ்வும் ஏனை உயிர் வழி வவ்வும் (ஏழை+ய்+என) | 2. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (ய்+எ=யெ) → ஏழையென. (மார்ச்–2025)
முன்னுடை = முன் + உடை	1. தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் (முன்ன்+உடை) 2. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (ன்+உ=னு) → முன்னுடை. (மே–2022)

புகழெனின் = புகழ் + எனின்	உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (ழ்+எ=ழெ) → புகழெனின்.
இயைவதாயினும் = இயைவது + ஆயினும்	1. உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் (த் + உ) 2. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (த்+ஆ=தா) → இயைவதாயினும்.

குறுவினா

1. "தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்" நூல் பற்றிக் குறிப்பு வரைக. (ஜூன் 2024)

⇒ இந்நூல் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களால் எழுதப்பட்டது.

⇒ கவின் கலைகள் குறித்து தமிழில் வெளிவந்த முழுமையான முதல் நூல்.

2. விரிபெரு தமிழர் மேன்மை ஓங்கிடச் செய்வதொன்றே உயிர்ப்பணியாகக் கொண்டோன் – யார், யாரைப் பற்றி எதற்காகக் கூறுகிறார்? (மார்ச் 2025)

⇒ தமிழரின் மேன்மையை உயர்த்தியதற்காகப் பாரதிதாசன், மயிலை சீனி. வேங்கிடசாமியைப் பற்றி கூறுகிறார்.

3. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

⇒ உழைப்பாளர்களின் சிவந்த கைகளையும்,

⇒ அவர்களின் தோள்மீதுள்ள வியர்வை துளிகளையும் வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்.

4. விடியல், வனப்பு – இரு சொற்களையும் ஒருங்கே அமைந்து ஒரு தொடர் அமைக்க.

விடியல் வானம் வனப்பு மிகுந்தது.

5. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக. (மார்ச் 2024)

⇒ காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு 1869–ல் உருவாக்கப்பட்டது.

⇒ இந்நூலகத்தில் அரிய பல ஓலைச்சுவடிகள், தாள் சுவடிகள், புத்தகங்கள் உள்ளன.

6. இனநிரை – பிரித்துப் புணர்ச்சி விதி

இனம் + நிரை

மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்.

7. இந்தோ – சாரசனிக் கட்டடக் கலை – குறிப்பு வரைக.

இது முகலாயக் கட்டடக் கலை, பிரித்தானியக் கட்டடக் கலை, இந்தியப் பாரம்பரிய பாணி ஆகியவற்றைக் கலந்து உருவாக்கப்பட்டது.

8. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது – விளக்கம் தருக (ஜூலை 2022, மார்ச் 2023, மார்ச் 2025,)

⇒ மழைக்காலத்தில் சூரியன் திடீரென தோன்றினான்.

⇒ நனைந்திருந்த பொருட்களெல்லாம் காய்ந்தன.

⇒ அதனால் நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாக ஒளி வீசுகிறது.

9. முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?

⇒ அறத்தின் இயல்போடு இல்வாழ்பவரை முயல்வாருள் எல்லாம் தலை எனச் சுட்டுகிறார்.

10. ஞாலத்தின் பெரியது எது? (மார்ச் 2024)

தகுந்த காலத்தில் செய்த உதவி.

11. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவை? (மார்ச் 2023, மார்ச் 2026)

பிறர் செய்த நன்மையை மறக்கக்கூடாது. பிறர் செய்த தீமையை மறக்க வேண்டும்.

12. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை? (மார்ச் 2025)

பிறருடைய பொருளை விரும்பாது இருத்தலாகும்.

13. சினத்தை ஏன் காக்க வேண்டும்?

ஒருவன் தன்னைத் தானே காத்துக்கொள்ள விரும்பினால் சினத்தைக் காக்க வேண்டும்.

14. மாதவியின் நாட்டிய நிகழ்வில் ஒலித்த இசைக்கருவிகளைப் பட்டியலிடுக.

குழல், யாழ், மத்தளம், முழவு, இடக்கை வாத்தியம்.

15. சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

குடிமக்கள் காப்பியம், மூவேந்தர் காப்பியம், புரட்சிக் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்.

16. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?

சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று,
காற்றின் தீராத பக்கங்களில்,
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் சென்றது.

17. அக்காலத்துக் கல்விமுறையில் மனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள், ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் போன்றவை.

18. மனத்தை அதன் போக்கில் செல்லவிடக்கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?

மனத்தைத் தீயவற்றிலிருந்து விலக்கி நல்வழியில் செலுத்துவதே அறிவுடைமையாகும்.

19. நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?

கள் உண்பவரைக் கண்டு நஞ்சு உண்பவர் எனக் கூறுகிறார்.

20. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?

பகைவராலும் அழிக்க முடியாத அரண் அறிவாகும்.

21. வறுமையும் சிறுமையும் தருவது எது?

வறுமையும் சிறுமையும் தருவது சூது.

23. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உரமூட்டும்? சான்று தருக. (மார்ச் 2023)

⇒ பின்னனி இசை, திரைப்படத்தின் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு கலை.

சான்று: தலைவி சோகத்துடன் இருப்பதை வெளிப்படுத்த, பின்னனி இசை மிக தாழ்ந்து ஒலிக்கப்படுகிறது.

24. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக. (மார்ச் 2026)

மருந்தால் மட்டுமே நோய் நீங்குவது இல்லை. மருத்துவன் நோயாளியிடம் விரைவில் நீங்கள் நலம் பெறுவீர்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

25. கலி விழா, ஒலி விழா – விளக்கம் தருக. (ஜூலை 2026)

கலிவிழா – எழுச்சி தரும் விழா
ஒலிவிழா – ஆரவாரம் நிறைந்த விழா

26. தரும மிகு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர் தலமோங்கு கந்தவேளே – தொடருக்குப் பதவுரை எழுதுக.

அறம் செய்வார் நிறைந்துள்ள சென்னையில் கந்தக்கோட்டத் திருக்கோயிலில் உள்ள கந்தவேளே.

27. பருவத்தே பயிர் செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக. (மார்ச் 2025)

காலம் அறிந்து ஏற்ற இடத்தையும் தேர்ந்து ஒரு செயலை மேற்கொள்வது நேர மேலாண்மையாகும். உரிய காலத்தை அறிந்து பயிர் செய்தால் நல்ல விளைச்சலைப் பெற முடியும்.

28. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு கருதினர்?

புகழ் வரும் என்றால் உயிரையும் கொடுப்பர். பழி வரும் என்றால் உலகமே கிடைத்தாலும் பெறமாட்டார்கள்.

30. இறை மகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

இந்த உலகம் பிளந்து வெடிக்கவில்லையே, வானம் இடிந்து விழவில்லையே, கடல்நீர் வற்றிப் போகவில்லையே, இந்த உலகம் இன்னும் அழியாமல் உள்ளதே எனப் புலம்பினர்.

மொழிப்பயிற்சி:

I. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

1. தாமரை இலை நீர் போல

இராமன் தாமரை இலை நீர் போல எதிலும் பற்றில்லாமல் இருக்கிறான்.

2. கிணற்றுத் தவளை போல்

இரகு அனுபவம் இல்லாமல் கிணற்றுத் தவளை போல அறியாமையில் வாழ்கிறான்.

3. எலியும் பூனையும் போல

அண்ணன் தம்பி இருவரும் எலியும் பூனையும் போல எப்போதும் சண்டையுடுவர்.

4. அச்சாணி இல்லாத தேர் போல

தலைவனை இழந்த தொண்டர்கள் அச்சாணி இல்லாத தேர் போல் தவிக்கிறார்கள்.

5. உள்ளங்கை நெல்லிக்கனி போல

ஆசிரியர் நடத்திய அறிவியல் பாடம் எனக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாகப் புரிந்தது.

தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.

எ.கா: கவிஞர்; ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம். – கவிமணி.

1. தமிழறிஞர் – முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம் – மறைமலை அடிகள்

2. தமிழறிஞர் – தாய்மொழி ஈற்றிரு எழுத்துகள், வெளிச்சம் தரும் – தமிழ் ஒளி.

3. சிறுகதை ஆசிரியர் – முதல் பாதி நவீனம் – புதுமைப்பித்தன்

4. முன்னெழுத்து அரசன், பின்னெழுத்து தமிழ் மாதம் – கோதை

மயங்கொலிச் சொற்களை ஒரே இடத்தில் அமைத்து எழுதுக.

எ.கா விலை, விளை, விழை

விளைச்சல் அதிகம் இருந்ததால் நல்ல விலைக்கு விற்க விழைந்தார்.

1. தலை, தளை, தழை.

தோட்டத்தில் உள்ள தழைகளை இரண்டு தளைகளாக்கி தலையில் சுமந்து சென்றான்.

2. கலை, களை, கழை.

கழையில் உள்ள கணுக்களைக் களைந்தால் இசைக்கலை பிறக்கும்.

3. அலை, அளை, அழை

அளையில் உள்ள பாம்பைப் பிடிக்க நகுலன் தன் நண்பனை அழைக்க அலைந்தான்.

4. மணம், மணம்

ரோஜாவின் மணம் மனதை மகிழ்விக்கும்.

கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.

எ.கா: வானம், பற, நிலவு, தொடு.

வானத்தில் பறப்போம். பறந்து நிலவைத் தொடுவோம்.

1. சருகு, விழு, மண், அலை

சருகு சருகாக விழுந்த இலைகள் மண்தரையில் அலைந்து கொண்டு இருந்தது.

2. விண்மீன், ஒளிர், எரி, விழு

விண்மீன் ஒளிர்ந்தது. அதில் ஒன்று எரிந்து கொண்டே விழுந்தது.

3. குழந்தை, நட, தளிர்நடை, விழு

குழந்தை நடந்தது. தளிர்நடையால் விழுந்தது.

4. திரை, காண், கைதட்டல், மக்கள்

காட்சியை திரையில் கண்ட மக்கள் கைதட்டினர்.

5. குதிரை, வேகம், ஓடு, தாவு.

குதிரை வேகமாக ஓடித் தாவியது.

வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

1. என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லாப் பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தைப் போல எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.

2. மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்பு கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

3. ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்து கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்து கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றைக் கற்றுக் கொடுக்கும்.

பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக்குக.

எ.கா: குமரன் வீடு பார்த்தேன்.

குமரனை வீட்டில் பார்த்தேன்.

1. மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்

மாறனின் பேச்சுத்திறனை யாரால் வெல்ல முடியும்.

2. போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன

போட்டியில் வெற்றி பெற்றதால் கலைச்செல்விக்குப் பாராட்டுகள் குவிந்தன.

3. காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்

காலையில் எழுந்து படித்தால் நமக்கு நன்மை ஏற்படும்.

4. சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வில் உயரலாம்

சான்றோர்க்கு மதிப்பு கொடுத்தால் வாழ்வில் உயரலாம்.

<u>தொடரில்</u> <u>உள்ள</u> <u>மரபுப்</u> <u>பிழைகளை</u> <u>நீக்கி</u> <u>எழுதுக</u>.

1. வாழைக்காட்டில் குயில்கள் அலறிக் கொண்டும் காகங்கள் கூவிக் கொண்டும் இருந்தன.

வாழைத் தோட்டத்தில் குயில்கள் கூவிக் கொண்டும் காகங்கள் கரைந்து கொண்டும் இருந்தன.

2. முருகன் சோறு சாப்பிட்டு பால் குடித்தான்

முருகன் சோறு உண்டு பால் பருகினான்.

3. கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தான்.

கோவிந்தன் குடியிருக்க சுவர் எழுப்பி கூரை வேய்ந்தான்.

4. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்.

வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குருளையையும் யானைக் கன்றையும் கண்டேன்.

5. ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.

ஆட்டுப் பட்டியைச் சுற்றிலும் எலிகள் வளைகள் அமைத்திருந்தன.

6. பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.

பனை ஓலையால் கூரை வேய்ந்திருந்தனர்.

<u>தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக</u>.

1. நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.

நம் மாநிலம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது.

2. எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.

எங்கள் ஊரில் நூலகக் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது.

3. ரங்கன் வெங்கலம் பாத்திரக்கடை வைத்திருந்தார்

இரங்கன் வெண்கலப் பாத்திரக் கடை வைத்திருந்தார்

4. மாணம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

வானம் பார்த்த பூமியில் பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

5. ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.

ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.

6. இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்

இன்றைக்கு மாலையில் கபடி போட்டி நடைபெறும்

<u>சொல்லை பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க</u>

எ.கா: பலகை – பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.

பல கைகள் ஒன்றிணைந்து வெற்றியைத் தமதாக்கினர்.

1. தாமரை: குளத்தில் தாமரை பூத்தது.

சீதை தாவும் மரை(மான்)யைக் கண்டாள்.

2. கோவில்: நான் கோவிலுக்குச் சென்றேன்.

கோ வில்லாற்றலில் சிறந்தவன்.

3. வெங்காயம்: உணவில் வெங்காயத்தைச் சேர்த்தனர்.

வெம் காயத்திற்கு மருந்து உண்டான்.

4. தலைமை: இராமன் தலைமை தாங்கினான்.

இராமன் தலைக்கு மை தடிவினான்.

<u>கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச் சொல்லைத் தொடர்களாக்குக.</u>

எ.கா: கபிலன் திறமையானவர் என்று (**குமரன்**) தெரியும்.

கபிலன் திறமையானவர் என்று குமரனுக்**குத்** தெரியும்.

1. நேற்று முதல் (**அணை**) நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

நேற்று முதல் அணை**யின்** நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

2. உங்களுக்கு (**யார்**) நன்மை என நினைக்கிறீர்கள்.

உங்களுக்கு யா**ரால்** நன்மை என நினைக்கிறீர்கள்.

3. முருகன் (**வேகம்**) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.

முருகன் வேக**மாகச்** சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.

4. நம்முடைய (**தேவை**) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

நம்முடைய தேவை**யின்** அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

<u>பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க</u>.

1. களம் – கலம்: போர்க்**களத்**தில் புண்பட்ட வீரர்களுக்குக் **கலத்**தில் நீர் கொடுக்கப்பட்டது.

2. **வலம் – வளம்:** ஆற்றின் **வலப்**புறம் உள்ள ஊர்கள் நீர்**வளத்**தால் செழித்திருந்தன.
3. **புல் – புள்:** அடிபட்ட **புள்** (பறவை), **புல்** தரையில் விழுந்தது.
4. **உளை – உழை: உழை**த்து உழைத்து மன **உளை**ச்சல் உண்டானது.
5. **கான் – காண்: கான**கத்தில் உள்ள காட்சிகள் **காண்**பதற்கு அழகு.
6. **ஊன் – ஊண்:** சிங்கம் **ஊனை** (இறைச்சியை) மட்டுமே **ஊண்**ாகக் கொள்ளும்.
7. **தின்மை – திண்மை:** அடுத்தவருக்கு **தின்**மை (தீமை) செய்யக்கூடாது என்பதில் **திண்**மையாக (வலிமை) இரு.

பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

எ.கா : இப்போ எனக்கும் புரிஞ்சுப்போச்சு. நீயும் புரிஞ்சுக்கோ. –
இப்பொழுது எனக்குப் புரிந்து விட்டது.
நீயும் புரிந்து கொள்.

1. **நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.**
நிலத்தைக் கிளற வேண்டும். அப்பொழுதுதான் வயிறு நிறையும்.
2. **அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதுதான.**
அன்று அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்க வேண்டியதுதானே.
3. **வூட்டாண்ட வெளையாண்ட கொழந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.**
வீட்டின் அருகில் விளையாடிய குழந்தையை அப்பா எங்கே அழைத்துச் சென்றார்.
4. **புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.**
பிள்ளைக்கு உடல்நிலை சரியில்லை. மூன்று நாள்களாகச் சிரமப்படுகிறது.
5. **ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போகச் சொல்.**
இரவுக்குச் சிற்றப்பாவைக் காவலுக்குப் போகச் சொல்.

மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

1. **ஆற அமர** – **ஆற அமர** யோசித்தல் நல்லது.
2. **ஆணி அடித்தாற் போல** – நல்ல கருத்துகள் நம் மனதில் **ஆணி அடித்தாற் போல** பதியும்.
3. **அகலக்கால்** – தெரியாத தொழிலில் **அகலக்கால்** வைத்தால் நட்டம் ஏற்படும்.
4. **வழிவழியாக** – குமரனின் குடும்பம் **வழிவழியாக**ச் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது.
5. **கண் துடைப்பு** – ஒரு சில அறிவிப்புகள் வெறும் **கண் துடைப்பு** நாடகமாகவே உள்ளது.

4 மதிப்பெண் வினாக்கள்:

1. மயிலை சீனி. வேங்கடசாமியின் வரலாற்று ஆய்வுகள் பற்றி விளக்குக.

- கி.பி. 3 முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த மன்னர்கள் பற்றி ஆய்வு செய்தார்.
- மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் ஆகிய பல்லவ மன்னர்களைப் பற்றி எழுதினார்.
- மூவேந்தர்கள், கொங்குநாட்டு மன்னர்கள், துளுநாட்டு மன்னர்கள் மற்றும் இலங்கையின் வரலாறு பற்றி ஆய்வு செய்தார்.
- களப்பிரர் பற்றி புதிய கண்ணோட்டத்தில் 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்' என்னும் நூலில் வெளிப்படுத்தினார்.

2. "செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப்
பூக்காடாம் வானமெல்லாம்" – தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை
விளக்குக. (மார்ச் 2026)

- செம்மை நிறம் கொண்ட கதிரவன் மாலை நேரத்தில் மலைக்குப் பின் மறைகிறது.
- அத்தகைய மாலைப்பொழுதில் வானம் சிவந்த நிறமாக உள்ளது.
- இக்காட்சி காண்பதற்குச் சிவந்த பூக்காடு போல காட்சி அளிக்கிறது.

3. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்? (மார்ச் 2023, மார்ச் 2024)

- வானம், உலகமே குளிருமாறு மழையைப் பொழிந்தது.
- கோவலர்கள், தங்கியிருந்த தாழ்வானப் பகுதியில் மழைநீர் சூழ்ந்தது.

- அதனால் ஆயர்கள் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை மேடான நிலங்களில் மேய விட்டனர்.
- அவர்கள் தலையில் சூடியிருந்த காந்தள் மலர்மாலை கசங்கியது.
- குளிர் அதிகமாக இருந்ததால், கொள்ளி நெருப்பினால் சூடேற்றி, பாதுகாப்பைத் தேடினர்.

4. சென்னை 'அறிவின் நகரம்' என்பதைச் சான்றுடன் விளக்குக. (மார்ச் 2025)

- சென்னையின் புகழுக்குச் சான்றாகப் பல கல்வி நிறுவனங்கள் உள்ளன.
- கோட்டைக்கல்லூரி, கிறித்தவக்கல்லூரி, மாநிலக்கல்லூரி, சென்னைப் பல்கலைக்கழகம், மருத்துவக்கல்லூரி, ஆசிரியர் பயிற்சி கல்லூரி, கவின்கலைக் கல்லூரி, மாற்றுத்திறனாளிகளுக்கானப் பள்ளிகள் போன்றவை உள்ளன.
- 1914 இல் பெண்களுக்காக உருவாக்கப்பட்ட இராணிமேரி கல்லூரி,
- ஆங்கிலேயர் நிதிஉதவியின்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட பச்சையப்பன் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்கள் சென்னையில் இருப்பதால் சென்னை 'அறிவின் நகரம்' எனப்படுகிறது.

5. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்னமும் நிலைத்து இருப்பவற்றைக் குறிப்பிடுக. (மார்ச் 2024)

- இந்திய சாரசனிக் கட்டிடக்கலை பாணியில் கட்டப்பட்ட கட்டடங்கள் பல சென்னையில் உள்ளன.
- ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட 'மெட்ராஸ் ரெக்கார்ட் ஆபீஸ்' என்னும் தமிழ்நாடு ஆவணக் காப்பகம் உள்ளது.
- இந்தியாவின் முதல் பொது நூலகமான கன்னிமாரா நூலகம்.
- மத்திய தொடர்வண்டி நிலையம், உயர்நீதிமன்றம், சென்னை பல்கலைக் கழகம், ரிப்பன் கட்டடம் ஆகியன சென்னையின் பண்பாட்டு அடையாளங்கள்.

6. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை? (மார்ச் 2025)

- பெற்றோர்கள் வீட்டிலும், அலுவலகத்திலும் படும் துன்பங்களை உணர்ந்து கொள்வேன்.
- அதனால் எனது உடைகளை நானே துவைத்துக் கொள்வேன்.
- அம்மாவிற்கு உறுதுணையாக வீட்டைத் தூய்மையாக வைத்துக்கொள்வேன்.
- அப்பாவுக்கு உதவியாக கடைக்குச் சென்று வருவேன்.
- அம்மா வேலை முடித்து வீட்டிற்கு வருமுன் உணவு சமைத்து வைப்பேன்.

7. மணந்தகம் – விளக்குக (மார்ச் 2026)

- மணம் பரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து வாழும் இல்லற வாழ்வின் தொடக்க காலம் மணந்தகம்.
- முதல் குழந்தை பிறக்கும் வரை உள்ள காலகட்டத்தைக் குறிக்கிறது.
- தனிக்குடும்ப உருவாக்கத்தில் தொடக்க நிலையாகும்.
- இவர்களுக்கு அறிவுரை கூறி வழிநடத்தும் பொறுப்பு செவிலித்தாய்க்கு உரியது.

8. ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி – விளக்குக. (மார்ச் 2026)

- திரை, மேடையின் ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்குச் செல்வது ஒருமுக எழினி.
- திரை, மேடையின் இருபுறத்திலிருந்து, நடுவில் வந்து ஒன்றுசேர்வது பொருமுக எழினி.
- திரை, வேண்டும்போது, மேலிருந்து கீழே இறங்கி வருவது கரந்துவரல் எழினி.

9. நீங்கள், ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
(மார்ச் 2023 & 2026, ஜூன் 2022 & 2024)

- நான் ஆசிரியரானால்...
- மரியாதை குறைவான பெயர் சொல்லி அழைக்க மாட்டேன்.
- மாணவர்களின் கருத்துக்களைக் காதுகொடுத்துக் கேட்டு நண்பனாக இருப்பேன்.

- மாணவர்களின் தவறுகளைத் திருத்தும் நல்ல வழிகாட்டியாக இருப்பேன்.
- தவறுகளுக்குத் தண்டனைகள் எதுவும் வழங்காமல் திருந்தும் வழியைக் காட்டுவேன்.

10. திரைப்படத்தின் காட்சி ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக. (ஜூன் 2024, மார்ச் 2026)

- காட்சி என்பது கதை நகர்வுக்கு உதவுகிறது.
- திரைப்படத்தில் காட்சிகள் சிறப்பாக இருந்தால் வசனத்திற்கு இரண்டாம் இடம்தான்.
- நாடகத்தில் விளக்கை அணைத்தும் திரையை இறக்கியும் காட்சி மாற்றம் நடைபெறும்.
- திரைப்படத்தில் காட்சிகளை அடுத்தடுத்து வைத்து கதையைச் சொல்வார்கள்.

சான்று:

காட்சி–1	**காட்சி–2**	**காட்சி–3**
தோழி, கதாநாயகி இடம் தொடர்வண்டி பயணச்சீட்டு கொடுத்தல்.	கதாநாயகி தொடர்வண்டியில் இருத்தல்.	கதாநாயகியை வீட்டில் காண்பித்தல்.

11. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

- மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும், நோயாளி அவரை நேசிப்பார்.
- அதுபோல், வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! நீ எனக்கு எவ்வளவு துன்பம் தந்தாலும் உன் அருளையே எதிர்பார்த்து வாழ்கிறேன் என்கிறார் குலசேகர ஆழ்வார்.

12. இராமலிங்க அடிகள், கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்? (ஜூலை 2022, மார்ச் 2023)

- அறம் செய்வோர் நிறைந்து வாழும் சென்னையின் கந்தக்கோட்டத்தில் எழுந்தருளும் கந்தவேளே!
- எனக்கு, எப்போதும் ஒரே மனத்துடன், உன் மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர் உறவு வேண்டும்.
- உள்ளத்தில் ஒன்றை வைத்து, புறத்தில் ஒன்று பேசும் வஞ்சகர் உறவு வேண்டாம் என்கிறார் இராமலிங்க அடிகள்.

13. வேளாண் மேலாண்மை குறித்து நீர் புரிந்துரைப்பனவற்றை எழுதுக. (ஜூலை 2022, மார்ச் 24 & 26)

- வேளாண்மையிலும் மேலாண்மை கூறுகள் உண்டு.
- சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல்
- உரிய நேரத்தில் விதைத்தல்
- தேவையான நேரத்தில் நீர்ப்பாய்ச்சுதல்
- அறுவடைக்குப் பின் பாதுகாத்தல்
- உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல்

14. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக. (ஜூன் 24, மார்ச் 25)

- இராமன் வீடணனிடம், நாங்கள் நால்வர் உடன்பிறந்தவர்களாக இருந்தோம்.
- கங்கைக் கரையில் குகனைச் சந்தித்த பின் ஐவரானோம்.
- மேருமலையைச் சுற்றும் சூரியன் மகனான சுக்ரீவனைச் சந்தித்த பின் அறுவர் ஆனோம்.
- எங்கள் மீது அன்பு கொண்டு, எங்களோடு வந்து சேர்ந்த உன்னோடு எழுவர் ஆனோம்.

15. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக. (மே–2022, மார்ச்–2024)

இடம்: தண்டி எழுதிய 'தண்டியலங்கார உரைமேற்கோள் பாடல்' என்னும் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பொருள்: கடல் சூழ்ந்த உலகத்தின் இருளைப் போக்கும்.

விளக்கம்:

⇒ உயர்ந்த மலைகளுக்கு இடையில் தோன்றி மக்களால் போற்றப்படுவது இரண்டு,

ஒன்று தமிழ், மற்றொன்று சூரியன்.

⇒ இவை இரண்டும் கடல் சூழ்ந்த உலகத்தில் வாழும் மக்களின் இருளைப் போக்கும்.

16. "நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து உறிஞ்சுகின்றன ஒளிக்கதிர்கள்" – இக்கவிதையின், "அடி தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே" – என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக. (மார்ச்–2025)

⇒ **புதுக்கவிதை கூற்று:**

நீர்நிலைகளில் இருக்கின்ற நீரைச் சூரியன் தன் ஒளிக்கதிர்கள் என்னும் உதடுகள் மூலம் உறிஞ்சிக் கொள்கிறான்.

⇒ **நாட்டுப்புறப் பாடல் கூற்று:**

தாவரங்களில் இருக்கின்ற பனிநீரைச் சூரியன் தன் ஒளிக்கதிர்கள் மூலமாக வாங்கிக் கொள்கிறான்.

17. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – விளக்கம் எழுதுக. (மே–2022)

⇒ சங்ககாலத்தில் கணவன், மனைவி, பிள்ளைகள் இவர்களுடன் பெற்றோர் சேர்ந்து வாழ்வது விரிந்த குடும்பம்.

⇒ இக்குடும்பத்தில் செவிலித்தாயும் அவளது மகளாகிய தோழியும் பங்கு பெறுவர்.

⇒ தலைவனும் தலைவியும் அறத்தினை விரும்பும் சுற்றத்தோடுச் சேர்ந்து இல்வாழ்க்கை வாழ்ந்தனர்.

⇒ இந்த விரிந்த குடும்பத்தைப் பின்பற்றித்தான் இன்றைய கூட்டுக் குடும்பம் உள்ளது.

18. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க. (மார்ச்–2024)

⇒ பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் இருந்தன.

⇒ அக்காலத்தில் எழுத்துகள், வரிகள் கோணாமல் எழுதினார்கள்.

⇒ இக்காலத்தில் அச்சுப் புத்தகங்களில் எவ்வளவு வேறுபாடு உண்டோ, அதே வேறுபாடு ஓலைச்சுவடியிலும் உண்டு.

⇒ இக்காலத்தில் காகிதத்தில் வேகமாக எழுதுவது போல, ஓலைச்சுவடியிலும் எழுதுவது உண்டு.

19. கவிதை என்பது கண்முன் நிகழ்வையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்தி சொற்சிமிழில் அடைக்கும் முயற்சி என்பதை நகுலன் கவிதையைக் கொண்டு நிறுவுக. (மார்ச்–2026)

⇒ பிறப்பு இருந்தால் இறப்பு இருக்கும் என்பதைத்தான் நகுலன் இவ்வாறு கூறுகிறார்.

"இருப்பதற்கென்றுதான்
வருகிறோம்
இல்லாமல்
போகிறோம்"

⇒ உயிர் அடங்கும் வரை ஆசைகள் அடங்காது என்பதைத்தான்...

"அலைகளைச் சொல்லிப்
பிரயோஜனமில்லை
கடல் இருக்கிற வரை." என்கிறார் நகுலன்.

⇒ ஒரு பிரச்சனையை முடிக்க தெரியாதவர்கள் தான்...

"பல உண்மைகளைச் சொல்கிறார்
ஒரு உண்மையைச் சொல்லாமல்
இருப்பதற்கு"
என்று கவிதை வடிக்கிறார் நகுலன்.

20. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்? (மார்ச்–2026)

⇒ பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த பெரிய ஊர் திருமயிலை.

⇒ அவ்வூரில் கோவில் கொண்டுள்ள இறைவன் கபாலீச்சரன்.

⇒ இவ்விறைவனுக்கு நடைபெறும் விழா பங்குனி உத்திர விழாவாகும்.

⇒ இவ்விழாவினைக் காணாமல் செல்வது முறையாகுமோ? என்று பதிவு செய்கிறார் திருஞானசம்பந்தர்.

21. " ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக (மார்ச் – 2025)

இடம்: எச்.ஏ. கிருஷ்ணனார் எழுதிய 'இரட்சணிய யாத்திரிகம்' என்னும் நூலில் இவ்வடி இடம்பெற்றுள்ளது.

பொருள்: இயேசு பெருமான் ஓர் ஏழையைப் போல நின்றார்.

விளக்கம்: இயேசு பெருமானை, ஆளுநரின் சீடர்கள் கையைக் கட்டும் போது, ஓர் ஏழையைப் போல அமைதியாக நின்றார்.

22. "உண்டால் அம்ம..." எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல், பொதுவியல் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.

⇒ வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறாத பொதுவானச் செய்திகளைக் கூறுவது பொதுவியல் திணை.

⇒ தமிழர்கள் தனக்காக உழைக்காமல் பிறருக்காக உழைப்பார்கள்.

⇒ யாரையும் வெறுக்க மாட்டார்கள், சோம்பல் இல்லாமல் இருப்பார்கள்.

⇒ புகழுக்காகத் தன் உயிரையும் கொடுப்பார்கள், உலகையே கொடுத்தாலும் பழிவரும் செயலைச் செய்ய மாட்டார்கள்.

அணிகள், திணை, துறை, இலக்கிய நயம் பாராட்டல், தமிழாக்கம் தருக, பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுதல் (வினா எண் 39 முதல் 43 வரை)

அணிகள்

1. **பொருள் வேற்றுமை அணி** (2024 & 2025)

அணி விளக்கம்: இரு வேறு பொருள்களுக்கு இடையே ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணியாகும்

சான்று: "ஓங்கலிடை வந்து" எனத் தொடங்கும் தண்டியலங்கார உரைமேற்கோள் பாடலாகத் தண்டி எழுதியது

அணிப் பொருத்தம்: இப்பாடலில் தமிழுக்கும் சூரியனுக்கும் உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி அவற்றுள் தமிழ் தன்னேரிலாதது என்று பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை அணி ஆகும்.

2. **நிரல் நிறை அணி** (2021, 2022, 2023, 2024 & 2026)

அணி விளக்கம்: சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே பொருள் கொள்ளச் செய்வது நிரல் நிறை அணியாகும்.

சான்று: அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

அணி பொருத்தம்: இக்குறளில் அன்பு,அறன் என்பதை வரிசையாக நிறுத்தி அவற்றோடு தொடர்புடைய பண்பு, பயன் என்பவற்றை முறையே அடுத்த வரிசையில் இணைத்துப் பொருள்கொள்ளச் செய்துள்ளதால் இது நிரல் நிறை அணியாகும்.

3. **ஏகதேச உருவக அணி** (2023 & 2024)

அணி விளக்கம்: ஒரு பொருளை உருவகம் செய்து அதற்கு இணையான மற்றொரு பொருளை உருவகம் செய்யாமல் விட்டுவிடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.

சான்று: சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் ஏமப் புணையைச் சுடும்

அணி பொருத்தம்: இக்குறளில் இனத்தைத் தெப்பமாக உருவகம் செய்த வள்ளுவர், உலக வாழ்க்கையைக் கடலாக உருவகப் படுத்தவில்லை. எனவே இது ஏகதேச உருவக அணி ஆகும்.

4. **சொற்பொருள் பின்வரு நிலையணி** (2025 & 2026)

அணி விளக்கம்: செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வரு நிலையணி ஆகும்.

சான்று: எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு

அணிப் பொருத்தம்: இக்குறளில் 'பொருள்' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து 'கருத்து' என்ற ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வரு நிலையணி ஆகும்.

5. **உவமை அணி** (2022, 2023 & 2024)

அணி விளக்கம்: உவமை ஒரு தொடராகவும், உவமேயம் ஒரு தொடராகவும் அமைந்து உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி.

சான்று: உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள் பாம்போடு உடன்உறைந் தற்று.

அணி பொருத்தம்: உவமை – குடங்கருள் பாம்போடு உடனுறைதல்
உவமேயம் – உடம்பாடு இலாதவர் வாழ்க்கை
உவம உருபு – அற்று.

திணை, துறை

1. **வாகைத் திணை** (2024 & 2026)

திணை விளக்கம்: வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப் பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத் திணையாகும்.

சான்று: "வையகம் பனிப்ப" எனத் தொடங்கும் நக்கீரர் பாடிய நெடுநல்வாடை பாடல்

திணைப் பொருத்தம்: போர்ப்பாசறையில் இருக்கும் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாக இருப்பதால் இப்பாடல் வாகைத் திணைக்குப் பொருத்தம் ஆயிற்று.

2. **பொதுவியல் திணை**

திணை விளக்கம்: வெட்சி முதல் பாடாண் திணை வரை கூறப்படாத செய்திகளையும் பிற பொதுவானச் செய்திகளையும் கூறுவது பொதுவில் திணையாகும்.

சான்று: " உண்டால் அம்ம" எனத் தொடங்கும் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி எழுதிய புறநானூறு பாடல்.

திணைப் பொருத்தம்: தமிழர்கள் புகழ் வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பார்கள். பழி வரும் என்றால் உலகத்தையே கொடுத்தால் கூட ஏற்க மாட்டார்கள். என்னும் பொதுவானச் செய்தி கூறப்பட்டுள்ளதால் இது பொதுவியல் திணை ஆகும்.

3. **கூதிர்ப் பாசறைத் துறை** (2025)

துறை விளக்கம்: கூதிர்ப்பாசறை என்பது போர்மேற் சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படை வீடு ஆகும்.

சான்று: " வையகம் பனிப்ப" எனத் தொடங்கும் நக்கீரர் பாடிய நெடுநல்வாடை பாடல்

துறை பொருத்தம்: குளிர்காலத்தில் பாண்டியன் நெடுஞ்செழியன் தன் போர் வீரர்களுடன் பாசறையில் தங்கிய செய்தி கூறப்பட்டுள்ளதால் இது கூதிர்ப் பாசறைத் துறையாகும்.

4. **பொருண்மொழிக் காஞ்சித் துறை** (2026)

துறை விளக்கம்: மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுவது பொருண்மொழிக் காஞ்சித்துறை ஆகும்.

சான்று: "உண்டால் அம்ம" எனத் தொடங்கும் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி எழுதிய புறநானூறு பாடல்

துறை பொருத்தம்: தமக்காக உழைக்காமல் பிறருக்காக உழைப்பவர்கள் இருப்பதால்தான் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுவதால் இது பொருண்மொழிக் காஞ்சித்துறையாகும்.

இலக்கிய நயம் பாராட்டல்

1. முச்சங்கங் கூட்டி (2024)

முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி!
– கண்ணதாசன்.

மையக் கருத்து: இப்பாடலில் தமிழ் மொழியின் பெருமையையும் சிறப்பையும் கண்ணதாசன் மையக்கருத்தாக வைத்துள்ளார்.

மோனை: அடிதோறும் அல்லது சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்
சான்று: முச்சங்கம்–**மு**துபுலவர்

எதுகை: அடிதோறும் அல்லது சீர்தூறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.
சான்று: மு**ச்**சங்கம் –அ**ச்**சங்கம்

இயைபு: அடிதோறும் இறுதி எழுத்தோ சொல்லோ ஒன்றி வருவது இயைபு ஆகும்.
சான்று: சங்கம் **கூட்டி** –தமைக்**கூட்டி** –பொருள் **கூட்டி** –கவி **கூட்டி** – பெருமாட்டி.

2. வெட்டி யடிக்குது மின்னல் – கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம்– கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய – மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!
–பாரதியார்

மையக்கருத்து:
இப்பாடலில் மழை பொழியும் நிகழ்வை பாரதியார் மையக்கருத்தாக வைத்துள்ளார்.

மோனை:
அடிதோறும் அல்லது சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்.
சான்று: **வெ**ட்டியடிக்குது –**வீ**ரத் திரைகொண்டு, **கொ**ட்டியிடிக்குது –**கூ**வென்று.

எதுகை:
அடிதோறும் அல்லது சீர்தூறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்
சான்று: வெ**ட்**டியடிக்குது – கொ**ட்**டி யிடிக்குது, ச**ட்**டசட– எ**ட்**டுத் திசையும்.

இயைபு: அடிதோறும் இறுதி எழுத்தோ சொல்லோ ஒன்றி வருவது இயைபு ஆகும்.

சான்று: இடிக்**குது**– குடை**யுது** –கனைக்**குது**.

3. பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி (2024)
பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.
–நாமக்கல் கவிஞர்

மையக் கருத்து:
இப்பாடலில் தமிழ் மொழியின் சிறப்பையும் பாரதியாரின் தொண்டையும் நாமக்கல் கவிஞர் மையக் கருத்தாக வைத்துள்ளார்.

மோனை: அடிதோறும் அல்லது சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்.
சான்று: **பெ**ற்றெடுத்த –**பி**ற மொழிக்கு, **ஊ**ற்றெடுத்தே –**உ**லகத்தில்

எதுகை: அடிதோறும் அல்லது சீர்தூறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.
சான்று: பெ**ற்**றெடுத்த– ஊ**ற்**றெடுத்தே, க**ற்**றுணர்ந்தே–தெ**ற்**றென.

முரண்: தமிழ் x பிறமொழி

4. பிறப்பினால் எவர்க்கும் –உலகில் (2022 & 2025)
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் –நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!
–கவிமணி தேசிக விநாயகம்.

மைய கருத்து:
இப்பாடலில் நன்மை செய்பவரை உலகம் போற்றும் தீமை செய்பவரை உலகம் தூற்றும் என்பதை கவிமணி தேசிக விநாயகம் அவர்கள் மையக் கருத்தாக வைத்துள்ளார்.

மோனை:
அடிதோறும் அல்லது சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்.
சான்று: **பி**றப்பினால் –**பெ**ருமை, **சி**றப்பு –**செ**ய்கை

எதுகை:
அடிதோறும் அல்லது சீர்தூறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.
சான்று: பி**று**ப்பினால்– சி**று**ப்பு ந**ன்**மை –தி**ன்**மை

இயைபு:
அடிதோறும் இறுதி எழுத்தோ சொல்லோ ஒன்றி வருவது இயைபு ஆகும்.
வரா**தப்பா**! –வேண்டு**மப்பா**!, மேற்குலத்**தார்**!– ஒன்னா**தார்**!

5. பூமிச்சருகாம் பாலையை (2026)
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே – கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை – செலுத்தி
இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை – ஏழை
விறகெரிக்க வீசுவேன்

–நா. காமராசன்

மையக் கருத்து:

இப்பாடலில் தன்னம்பிக்கை இருந்தால் எந்த செயலையும் செய்ய முடியும் என்பதை நா. காமராசன் மையக் கருத்தாக வைத்துள்ளார்.

மோனை:

அடிதோறும் அல்லது சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்.

சான்று: பூமிச்சருகாம் – பயலை, இரவில்– இரவெரிக்கும்

எதுகை:

அடிதோறும் அல்லது சீர்தூறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.

சான்று: இரவில்– இரவலோடு, இரவெரிக்கும்.

இயைபு:

அடிதோறும் இறுதி எழுத்தோ சொல்லோ ஒன்றி வருவது இயைபு ஆகும்.

சான்று: கடல்களாக்குவேன்– தென்றலாக்குவேன் –பேசுவேன் – வீசுவேன்

தமிழாக்கம் தருக. (2022 & 2024)

1. Learning is a treasure that will follow its owner everywhere.
   கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு
2. A new language is a new life.
   ஒரு புதிய மொழி ஒரு புதிய வாழ்க்கை.
3. If you want people to understand you, speak their language.
   மக்கள் உன்னைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் நீ அவர்கள் மொழியில் பேசு
4. Knowledge of languages is the doorway to wisdom.
   மொழி அறிவே ஞானத்தின் வாசல்
5. The limits of my language are the limits of my world.
   என் மொழியின் எல்லையே என் உலகின் எல்லை.

பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக

1. 'யானைக்கும் அடி சறுக்கும்' (2022 & 2024)

பழமொழி விளக்கம்: எவ்வளவு பெரிய அறிஞர்களுக்கும் தவறுகள் நேரும்.

வாழ்க்கை நிகழ்வு:

ஆனந்தன் மிகவும் புத்திசாலி.ஒரு சமயம் பொருட்காட்சியில் நான்கு கடிகாரங்களை விரும்பி வாங்கினான். பணம் குறைந்ததால் கடைக்காரர் நீங்கள் முன் பணம் மட்டும் கொடுங்கள் நாங்கள் வீட்டிற்கே வந்து தருகிறோம் என்று கூறினார். அவர் வார்த்தையை நம்பி ஆயிரம் ரூபாய் முன்பணம் கொடுத்துவிட்டு வந்தான். ஒரு வாரமாகியும் யாரும் வராததால் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தான்.

2. 'தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்.'(2025)

பழமொழி விளக்கம்:

நாம் செய்யும் நல்ல, தீய செயல்களுக்கு ஏற்பவே பலன் கிடைக்கும்.

வாழ்க்கை நிகழ்வு:

கபிலன் தன் ஊரில் உள்ள முதியவர்களுக்குத் தொடர்ந்து பல உதவிகள் செய்து வந்தார். அதனால், அவருக்கு ஆபத்து வந்தபோது ஊர் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி உதவினர். ஆனால் சாரதி என்பவன் யாருக்கும் எந்த உதவியும் செய்ய மாட்டான் அனைவரையும் கேலி செய்வான். அவனுக்கு ஆபத்து வரும்போது யாரும் உதவ முன் வரவில்லை.

3. 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.' (2024)

பழமொழி விளக்கம்:

உறவினர் மற்றும் நண்பர்களிடம் எப்போதும் குறை கண்டுபிடித்துக் கொண்டே இருந்தால் அந்த உறவு நீடிக்காது.

வாழ்க்கை நிகழ்வு:

இரகு தனது நண்பனின் சிறு தவறுகளைப் பெரிதுபடுத்தாமல் அவனுடன் நட்பாகவே பழகினான். இதனால் அவனுக்கு நல்ல நண்பர்கள் கூட்டமாகவே இருந்தனர். ஆனால் கபிலன் என்பவன் நண்பர்களிடம் எப்போதும் குறை கண்டுபிடித்துக் கொண்டே இருப்பான். எனவே அவனிடம் பழகிய நண்பர்கள் சிலரும் அவனை விட்டு பிரிந்து சென்றனர்.

4. 'எறும்பு ஊரக் கல்லும் தேயும்.' (2024 & 2025)

பழமொழி விளக்கம்:

எவ்வளவு கடினமான பணியாக இருந்தாலும், சோர்ந்து போகாமல் தொடர்ந்து விடாமுயற்சியுடன் முயன்றால் அதில் நிச்சயம் வெற்றி பெறலாம்.

வாழ்க்கை நிகழ்வு:

குமரனால் ஆரம்பத்தில் நன்றாகக் கணக்குப் போட முடியவில்லை. ஆனால், அவன் மனம் தளராமல் ஆசிரியரின் வழிகாட்டுதலோடு தினமும் விடாமல் பயிற்சி செய்ததால் தேர்வில் நூறு மதிப்பெண்கள் பெற்றான்.

5. 'ஊழி பெயரினும் தாம் பெயரார்' (2020, 2022 & 2024)

பழமொழி விளக்கம்:

எந்தத் துன்பம் வந்தாலும், சான்றோர்கள் தமது நல்ல பண்புகளிலிருந்து சிறிதும் மாற மாட்டார்கள்.

வாழ்க்கை நிகழ்வு:

பெரும் வெள்ளத்தால் கிராமம் பாதிக்கப்பட்டபோதும், எழிலரசனும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும் மிஞ்சி இருந்த தன் செல்வத்தைக் கொண்டு தனது மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து தனது உதவும் குணத்திலிருந்து மாறாமல் நின்றான்.

6. 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.'

பழமொழி விளக்கம்:

திறமையும் ஆற்றலும் உள்ளவர்களுக்குக் கையில் கிடைக்கும் எளிய பொருள்கூடச் சிறந்த கருவியாகவும் வெற்றியைத் தருவதாகவும் அமையும்.

வாழ்க்கை நிகழ்வு: அறிவியல் கண்காட்சியில் கலந்துகொண்ட செல்வன், சாதாரணப் பெட்டி மற்றும் குச்சிகளைக் கொண்டு மிக அற்புதமான ஒரு மின்சாதனப் பொருளைச் செய்து அனைவரது பாராட்டையும் பெற்று முதல் பரிசையும் பெற்றான்.

7. 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.'

பழமொழி விளக்கம்:

மனிதர்கள் அனைவரும் ஒற்றுமையாகச் சேர்ந்து வாழ்ந்தால் நன்மையே கிடைக்கும்.

வாழ்க்கை நிகழ்வு:

முகையூர் என்ற கிராமத்தில் பெரிய ஏரி ஒன்று இருந்தது ஆனால் ஏரி முழுக்க காட்டாமணக்குச் செடி மண்டிக் கிடந்தது. கிராமத்து மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து ஏரியைத் தூர் வாரி உழைத்ததால், அந்த ஊரில் தண்ணீர் பற்றாக்குறை நீங்கி விவசாயம் செழித்தது.

8. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.'


பழமொழி விளக்கம்:

ஒருவரின் மனதில் உள்ள எண்ணங்களை அவரது முகமே காட்டிக் கொடுத்து விடும்.

வாழ்க்கை நிகழ்வு:

என் நண்பன் பெயர் பாலாஜி.எப்போதும் பிறருக்கு உதவி செய்யும் நல்ல உள்ளம் கொண்ட பாலாஜி யாருக்கு எந்த உதவி தேவைப்பட்டாலும் ஓடிச் சென்று உதவுவான். எப்போது பார்த்தாலும் புன்னகை முகத்துடனே அனைவரிடமும் அன்பாகக் காணப்படுவான்.

1. கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.



பத்தி

சங்க இலக்கியம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு ஆகும். எட்டுத்தொகையில் அகம் சார்ந்த நூல்கள் நற்றிணை, குறுந்தொகை ,ஐங்குறுநூறு, அகநானூறு மற்றும் கலித்தொகை ஆகும். புறம் சார்ந்த நூல்கள் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகும். அகமும் புறமும் கலந்த நூல் பரிபாடல் ஆகும்.

பத்துப்பாட்டில் குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகியவை அகம் சார்ந்த நூல்கள் ஆகும். மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை, பொருநறாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகியவை புறம் சார்ந்த நூல்களாகும்.

நெடு வினாக்கள். வினா என் 44 முதல் 46 வரை

1. மயிலை சீனி வேங்கடசாமி ஒரு 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்பதைச் சான்றுகளுடன் நிறுவுக. (2023,2025)

1. கிறித்துவமும் தமிழும், பௌத்தமும் தமிழும் சமணமும் தமிழும் போன்ற நூல்களைத் தொடக்க காலத்தில் ஆய்வு செய்து எழுதி உள்ளார்.
2. 1950 களில் கிபி 3ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்த மன்னர்கள் பற்றி ஆய்வு செய்தார்
3. மகேந்திர வர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் போன்ற பல்லவ மன்னர்களைப் பற்றி ஆய்வு செய்து நூல்களை எழுதியுள்ளார்.
4. களப்பிரர் குறித்த புதிய கண்ணோட்டத்தைக் 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்' என்னும் நூல் மூலம் வெளிப்படுத்தினார்.
5. கவின் கலை குறித்து தமிழில் வெளிவந்த முழுமையான முதல் நூலான 'தமிழர் வளர்த்த அழகு கலைகள்' என்னும் நூலை எழுதியுள்ளார்.
6. சொல் ஆய்வு குறித்து அவர் எழுதிய சொல் ஆய்வுகள் 'அஞ்சிறைத் தும்பி' என்ற தொகுப்பாகச் 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் இதழில் வெளியிடப்பட்டது.

2. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. (2023 & 2026)

1. தமிழ் தமிழ் என்று எப்போதும் தமிழை வளர்ப்பதையே கடமையாகக் கொள்ள வேண்டும், புதிய செய்தி, புதிய இன்பம், புதிய உண்மை வெளிப்பட வேண்டும்
2. தமிழ்நாடு வாழ்க. தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க. தமிழ்நாட்டு வீதிகள் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் பெருக வேண்டும்.
3. சங்கீதம், சிற்பம், எந்திர நூல், பூமி நூல், வான நூல், இயற்கை நூல் தமிழ்நாட்டில் மலிந்திடுக.
4. ஆணும் பெண்ணும் ஓர் உயிரின் இரண்டு தலைகள். அவற்றில் ஒன்றில் ஒன்று தாழ்வில்லை.
5. பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான். பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தான்.
6. தொழில்கள் வளர்க! வியாபாரம் வளர்க! எந்திரங்கள் பெருகுக!.

3. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக. (2023, 2024, 2025)

1. மாலையில் சூரியன் மலைக்குப் பின் மறைகிறான் அவன் கதிர் பட்டு வானம் பூக்காடாகக் காட்சியளிக்கிறது.
2. சூரியன் போன்ற சிவந்த கைகளைக் கொண்ட தொழிலாளர்களின் தோள் மீது முத்து முத்தாய் வியர்வை வழிகிறது. இவற்றை வியந்து பாடத் தமிழே நீயே துணை.
3. எனக்குள் எழும் கவிதைப் பசிக்கு முத்தமிழே நீயே உணவு.
4. பாண்டியரின் அவையில் தெய்வமாக வணங்கப்பட்டாய். பாரி போன்ற வள்ளல்களை இவ்வுலகிற்குத் தந்தாய். !
5. அது போன்ற பழமையான நலமெல்லாம் திரும்ப வரவேண்டும் என்று தமிழ்க்குயிலே! நீ கூவி வா! வா!
6. கூண்டை உடைத்து வெளியே வரும் சிங்கத்தைப் போல பொதிகைத்தமிழே
   நீ சீறி வா! வா!

4. நீங்கள் வியந்து பார்த்த ஒரு நகரம் குறித்து இரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. (2020,2024)

1. சென்னைக்கு அருகே உள்ள குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுப் பணி சென்னை ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பகுதி என்று நிறுவுகிறது.
2. சென்னை கோட்டை கல்லூரி, கிறித்துவக்கல்லூரி, பிரசிடென்சி கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, பெண்களுக்கான இராணி மேரி கல்லூரி போன்றவை மக்களுக்குக் கல்வி சேவையை வழங்குகின்றன.
3. மேலும் மருத்துவக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரி, கவின்கலைக் கல்லூரி, மாற்றுத்திறனாளிகளுக்கானப் பள்ளி என சென்னை அறிவின் நகரமாகத் திகழ்கிறது.
4. தமிழ்நாடு ஆவணக் காப்பகம், கன்னிமாரா நூலகம், எழும்பூர் அருங்காட்சியகம், புனித ஜார்ஜ் கோட்டை அருங்காட்சியகம், திரைப்படம் சார்ந்த தொழில்களும் சென்னையின் அடையாளங்களாகத் திகழ்கின்றன.
5. சென்னையில் அண்ணா சாலை, பூவிருந்தவல்லி சாலை போன்ற நெடுஞ்சாலைகளும், எழும்பூர் தொடர்வண்டி நிலையம், மத்திய தொடர்வண்டி நிலையம், மீனம்பாக்கம் விமான நிலையம் போன்ற போக்குவரத்து வசதிகள் சென்னையைப் பிற பகுதிகளோடு இணைக்கின்றன.
6. சென்னை மெரினா கடற்கரை உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய கடற்கரையாகும்.

5. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைத் தொகுத்து எழுதுக. (2026)

1. மேகமானது மலையைச் சூழ்ந்து கொண்டு பெரும் மழையைப் பொழிந்தது. முல்லை நிலமே வெள்ளக்காடாக மாறியது
2. மழையை வெறுத்த கோவலர்கள் புலம்பிக்கொண்டே தங்கள் ஆடுகளையும் மாடுகளையும் மேடான இடம் நோக்கி அழைத்துச் சென்றனர்.

3. மழையால் நனைந்திருந்த அவர்கள் உடலில், குளிரும் சேர்ந்து நடுக்கத்தை ஏற்படுத்தியது. எனவே மற்ற கோவலர்களுடன் இணைந்து கொள்ளி நெருப்பினால் குளிர்காய்ந்தனர்.
4. குளிர் மிகுதியால் விலங்குகள் மேய்ச்சலை மறந்தன.
5. குரங்குகள் குளிரால் நடுங்கின, மரங்களில் இருந்த பறவைகள் நிலத்தில் விழுந்தன.
6. பசுக்கள் பால் உண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன.

6. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க (2024).

1. சொந்தமாக நிலம் இல்லாத நிலையிலும், மழையால் அழுகும் நிலையில் இருந்த பயிர்களைக் கண்டு மருதன் மனம் வாடினான்.
2. வடிவாய்க்காலில் உள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அகற்றித் தூர்வாரினால் மட்டுமே பயிர்களைக் காப்பாற்ற முடியும் என்ற தெளிவான வழியைக் கண்டறிந்தான்.
3. மாரிமுத்து, காளியப்பன், சமூக சேவகர் பிரேம்குமார் மற்றும் ஊர் மக்களிடம் வடிவாய்க்காலைச் சுத்தம் செய்யும் யோசனையைக் கூறி உதவி கேட்டான்.
4. ஊரார் வேலை இருப்பதாகக் கூறியபோதும், மனைவியே தடுத்தபோதும் பின்வாங்காமல் பயிர்களைக் காப்பாற்றும் எண்ணத்திலேயே உறுதியாக இருந்தான்.
5. பிறர் யாரும் வராத நிலையிலும், சோர்ந்து போகாமல், விடிந்ததும் தனி ஒரு ஆளாக வடிவாய்க்காலைச் சுத்தம் செய்யக் களத்தில் இறங்கினான்.
6. மருதனின் சுயநலமற்ற உழைப்பைக் கண்டு அவனது மனைவி, மாரிமுத்து, காளியப்பன் மற்றும் ஊர் மக்கள் அனைவரும் மனம் மாறி அவனுடன் சேர்ந்து செயல்படத் தொடங்கினர்.

7. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரி செய்யக்கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக. (2025).

விடுநர்.

அஅஅஅஅஅ,
எண்.10 முல்லை தெரு,
செங்கல்பட்டு – 603001.

பெறுநர்.

மின்வாரியப் பொறியாளர்,
மின்வாரியப் பொறியாளர் அலுவலகம்,
செங்கல்பட்டு –603001.

ஐயா,

பொருள்: அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரி செய்ய கோருதல் – சார்ந்து.

எங்கள் ஊரில் புயல் தாக்கத்தினால் மின் இணைப்புகள் அறுந்து விழுந்து மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உயிருக்கே ஆபத்தாய் உள்ளது. எனவே ஆபத்து ஏற்படுவதற்கு முன் விரைந்து மின் இணைப்புகளைச் சரி செய்து தருமாறு தங்களைக் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இடம்: செங்கல்பட்டு
நாள்: 20–09–2026

தங்கள்உண்மையுள்ள,
அஅஅஅஅஅ

உறைமேல் முகவரி:

மின்வாரியப் பொறியாளர்,
மின்வாரியப் பொறியாளர் அலுவலகம்,
செங்கல்பட்டு – 603001.

8. செய்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

(2020, 2025)

1. நாம் ஓர் உதவியும் செய்யாதிருந்தும் நமக்கு உதவி செய்த ஒருவருக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் கொடுத்தாலும் ஈடாகாது.
2. உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும் அது உலகத்தை விட மிகப் பெரியதாகும்.
3. பயனை ஆராயாமல் ஒருவர் செய்த உதவியானது கடலை விட பெரியதாகும்.
4. ஒருவர் தினை அளவு உதவி செய்த போதிலும் அதன் பயனை உணர்ந்தவர்கள் பனை அளவாகக் கொண்டு போற்றுவார்கள்.
5. ஒருவர் நமக்குச் செய்த உதவியை மறக்கக்கூடாது. ஆனால் ஒருவர் செய்த தீமையை அப்போதே மறந்து விட வேண்டும்.
6. எந்த அறத்தை அழித்தவருக்கும் தப்பிப் பிழைக்க வாய்ப்பு உண்டு, ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவருக்குத் தப்பிப் பிழைக்க வாய்ப்பே இல்லை.

9. 'சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும்' இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.

(2024)

1. தன் சினம் செல்லுபடியாகும் மெலியவரிடத்தில் கொள்ளாமல் காப்பவரே உண்மையில் சினம் காப்பவர். செல்லுபடியாகாத வலியவரிடத்தில் காத்தால் என்ன? காக்கா விட்டால் என்ன?
2. தீமையான விளைவுகள் சினத்தாலேயே ஏற்படும். எனவே யாரிடமும் சினம் கொள்ளாமல் அதை மறந்து விட வேண்டும்.
3. முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தை விட, நமக்கு வேறு பகை இல்லை.
4. ஒருவர் தன்னைத்தான் காத்துக் கொள்ள விரும்பினால், சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும். காக்கா விட்டால் சினம் நம்மையே அழித்துவிடும்.
5. சினம் நமக்குப் பாதுகாப்பாக இருக்கும் உறவினர்களையும், நண்பர்களையும் சேர்த்து அழிக்கும்.

10. குடும்பம் என்னும் சிறிய அமைப்பில் இருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது– எவ்வாறு? விளக்குக. (2021, 2022 & 2026).

1. குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே. குடும்பம், திருமணம் இரண்டும் நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றதாகும்.
2. மணம் புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக் கூடிய தொடக்கக் கட்டமே மணந்தகம் எனப்படுகிறது.
3. சங்ககாலத்தில் பெண் திருமணத்திற்குப் பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாயமுறை இருந்துள்ளது. தாய் வழியாகக் கிடைத்த சொத்துக்களும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்கே சென்று சேர்ந்தன.
4. "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" என்னும் குறுந்தொகைப் பாடலால் பெண் தன் கணவனை முழுவதும் சார்ந்திருந்த நிலையால் சங்க கால இறுதியில் தந்தை வழிக் குடும்பம் உருவானதை அறிய முடிகிறது.
5. தாய், தந்தை குழந்தை மூவரும் உள்ள தனிக் குடும்பம் எளிய குடும்பம் எனப்படுகிறது.
6. சங்க காலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவு பெற்று, இவர்களுடன் பெற்றோர்களும் உடன் வாழும் விரிந்த குடும்ப முறையும் காணப்படுகிறது.

11. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக (2020, 2024).

1. கங்கை வேடன் குகன் இராமனுக்குக், கங்கை ஆற்றைக் கடக்க உதவினான். எனவே, இராமன் குகனைத் தன் சகோதரனாகவும், நண்பனாகவும் ஏற்றுக் கொண்டார்.
2. இராவணன் சீதையைச் சிறை எடுத்த போது, கழுகு வேந்தன் சடாயு அவனோடு

சண்டையிட்டு இறந்து விடுகிறார். அவரைத் தந்தையாக ஏற்று இராமன் இறுதிச்சடங்கு செய்தார்.

3. சீதையைத் தேடி வரும் இராமனைச் சுக்ரீவனுடன் நட்பு கொள்ளச் செய்தவர் சவரி. இராமன் சவரியைத் தன் தாயாக ஏற்று அவரிடம் அன்பு காட்டினார்.
4. சூரியனின் மகனானச் சுக்ரீவன் கடலைக் கடக்க தன் வானரப் படையோடு பாலம் கட்ட உதவினான். எனவே, இராமன் சுக்ரீவனைத் தன் சகோதரனாகவும், நண்பனாகவும் ஏற்றுக் கொண்டார்.
5. எதிரியான இராவணனின் தம்பி வீடணன், தன் அண்ணன் செய்யும் செயல் பிடிக்காமல் இராமனிடம் அடைக்கலம் வேண்டினான். இராமன் அவனைத் தன் சகோதரனாக ஏற்று இலங்கை அரசை அவனுக்குப் பரிசாகத் தந்தார்.
6. இவ்வாறு இராமன் பிற உயிர்களோடும், மனிதர்களோடும் மேலான உறவைக் கடைப்பிடித்தான்.

12. 'உரிமைத் தாகம்' கதையில் வெளிப்படும் உறவின் மேன்மையை புலப்படுத்துக

(2020, 2024, 2025 & 2026)

1. அண்ணன் முத்தையன் அவன் தம்பி வெள்ளைச்சாமி, இவர்களின் தாய், முத்தையாவின் மனைவி மூக்கம்மாள் குடும்பமாக வாழ்ந்து வந்தனர்.
2. அம்மா இருந்தும் அம்மா நிலையில் வெள்ளைச்சாமியை வளர்த்தவள் மூக்கம்மாள் தான். 'மதனி கஞ்சி வேண்டும்' என்று கேட்டவுடன் அலுத்துக் கொள்ளாமல் கஞ்சி கொடுப்பாள்.
3. ஒற்றுமையாக இருந்த குடும்பம் வெள்ளைச்சாமியின் திருமணத்திற்குப் பிறகு பிரிந்தது. மனைவி பேச்சைக் கேட்டுக் கொண்டு அண்ணனிடம் சொத்து கேட்டு தனிக் குடும்பம் போனான் வெள்ளைச்சாமி. இரு குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தை நின்று போனது.
4. மேலூர் பங்காருசாமியிடம் நிலத்தை அடமானம் வைத்து 200 ரூபாய் கடன் வாங்கிய வெள்ளைச்சாமியால் கடனை அடைக்க முடியாததால் "நிலத்தை நான் உழுவேன்" என்று கூறுகிறான் பங்காருசாமி.
5. இந்தச் செய்தி மூக்கம்மாள் மூலமாக முத்தையனுக்குத் தெரிந்து தம்பியிடம் சென்று ஆறுதல் கூறி, பங்காருசாமியைப் பார்த்து கணக்கை முடிக்கச் சென்றான் முத்தையன்.
6. அசலையும் வட்டியையும் அடைக்கச்சென்ற முத்தையனிடம், பங்காருசாமி 400 ரூபாய் கடன் என்று கூற, கோபம் கொண்ட முத்தையன் "அவரவருக்குத் தெரிந்ததைப் பார்த்துக் கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டு வந்தான்.
7. மறுநாள் அண்ணனும் தம்பியும் ஏர் உழுவதுகண்டு அங்கு வந்த பங்காருசாமி சட்டம் பேசினார். அண்ணனும் தம்பியும் அடிக்கப் பாய்ந்தனர். உயிர் பிழைத்தால் போதும் என்று மேலூரை நோக்கி ஓடினார் பங்காருசாமி.

13. அரங்கின் அமைப்பை சிலப்பதிகாரத்தின் வழி விளக்கி எழுதுக. (2020, 2022 & 2024).

1. நூல் மரபில் சொல்லப்பட்டவாறு மாதவி ஆடுவதற்காக நல்ல இடம் தேர்வு செய்யப்பட்டது.
2. பொதிகை மலையிலிருந்து ஒவ்வொரு கணுவிற்கும் ஒரு சாண் என்ற அளவில் 24 சாண் அளவுள்ள ஒரு மூங்கில் வெட்டிக் கொண்டுவரப்பட்டது.
3. எட்டுக்கோல் நீளம் ஏழு கோல் அகலம் ஒரு கோல் உயரம் கொண்டு, மேடையின் மேல் இருந்து விதானம் வரை நாலு கோல் உயரம் கொண்ட மேடை அமைக்கப்பட்டது.
4. உள்ளே செல்வதற்கும் வெளியே வருவதற்கும் இரண்டு வாயில்கள் அமைக்கப்பட்டது.
5. மேடை முழுவதும் முத்துமணி மாலைகளால் அலங்காரம் செய்யப்பட்டது. மேலும் மேல்விதானத்தில் பஞ்சபூதங்களின் ஓவியம் வரையப்பட்டது.
6. ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்து வரல் எழினி என்ற மூன்று திரைகள் அமைக்கப்பட்டன.

14. பண்டைக்கால கல்விமுறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக. (2022 &2024).

1. ஊருக்கு நடுவே ஒரு பெரிய மரத்தடியில் மேடை அமைக்கப்பட்டு, கற்றல் கற்பித்தல் நடைபெற்றது. இதற்கு மன்றம் அல்லது அம்பலம் என்று பெயர்.

2. ஐந்து வயதில் பெற்றோர்கள் ஆசிரியர்களிடம் தங்கள் பிள்ளைகளை அடைக்கலமாகக் கொடுத்து, வித்தியாரம்பம் தொடங்கினர்.
3. ஆசிரியர் நெடுங்கணக்கைச் சொல்லசொல்ல மாணவர்கள் திருப்பி சொல்வதற்கு, 'முறை வைப்பது' என்று பெயர்.
4. மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி போன்ற எழுத்தாணிகள் கொண்டு மாணவர்கள் ஓலைச்சுவடிகளில் எழுதினார்கள்.
5. தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்றவை அக்காலத்தில் மாணவர்களின் மனனப் பயிற்சிக்கு உரிய நூல்களாக இருந்தன.
6. முற்காலத்தில் கொடிய தண்டனைகள் இல்லை ஆசிரியர்கள் மாணவர்களை அன்பினால் நல்வழிப்படுத்தினார்கள்.

15. 'சூரியனைப் பிரசவிக்கும் பாறை' என்னும் சிறுகதை உணர்த்தும் கருத்துகளைச் சுவை குன்றாமல் சுருக்கி வரைக.

1. சிறுவன் மீரான், பாறையின் பின்னாலிருந்துதான் தினமும் சூரியன் பிறக்கிறது என்றெண்ணி, அதை நேரில் காணும் பேராவல் கொண்டான்.
2. பாறையில் நாகம் காவல் காக்கும் ஊசிக் கிணறு இருப்பதாக அம்மா கூறிய பிறகும், மீரான் யாருக்கும் தெரியாமல் பாறையின் மீது ஏறி இயற்கையின் அழகில் மெய்மறந்தான்.
3. பாறையின் மேல் மீரான் எதிர்ப்பாராத வகையில் படம் எடுத்து நின்ற நாகப்பாம்பிடம், சினேகத்துடன் "என்னைக் கொத்துவியா?" என்று கேட்க, அவனின் நற்குணத்தைக் கண்டு பாம்பும் நட்பானது.
4. ஊசிக் கிணற்றைப் பார்க்க வந்ததாகக் கூறிய மீரானிடம், "அப்படி ஒரு கிணறே இல்லை; பொய்கள் நாளடைவில் மூடநம்பிக்கையாகி விடுவது மனித இயல்பு" என்று கூறிப் பாம்பு உண்மையை உணர்த்தியது.
5. "நாங்கள் மனிதர்களைப் போல அல்லாமல் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவர்கள்; அதன் எல்லையை மீறமாட்டோம்" என்று பாம்பு அவனுக்கு வாழ்வியல் உண்மையைக் கூறியது.
6. பெரியவன் ஆனதும், பாம்பு கூறிய மூடநம்பிக்கை பற்றிய தெளிவை மீரான் முழுமையாகப் புரிந்து கொண்டான்.

16. அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று விளக்குக. (2020, 2021, 2022, 2024, 2026)

1. அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும். மேலும் பகைவராலும் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணும் ஆகும்.
2. மனதை அது போகும் போக்கில் செல்ல விடாமல், தீமையிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.
3. எப்பொருளை யார் யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் மெய்யானப் பொருளைக் காண்பதே அறிவாகும்.
4. உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ அதே நிலையில் நாமும் உலகத்தோடு செல்வதே அறிவாகும்.
5. பின்பு வரப்போவதை முன்பே அறிந்து காத்துக் கொள்ளும் அறிவுடையவருக்கு நடுங்கும்படியானத் துன்பம் இல்லை.

17. திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் நிறுவுக. (2023)

மாணவர்கள் தங்களுக்குத் தெரிந்த ஏதேனும் ஆறு திருக்குறளின் பொருள்களை எழுதவும்.

18. திரைப்படத் துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமா? உங்கள் கருத்தைக் கட்டுரையாக்குக.

1. திரைப்படத் துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலாகும். திரைப்படம் தயாரிப்பது பெரும் முதலீட்டில் செய்யப்படும் தொழிலாகும்.
2. நடிகர்களைத் தேர்வு செய்தல், உரையாடல் எழுதுதல், பாடல் எழுதுதல், இசையமைத்தல்,

நடிப்பதற்கான இடங்களைத் தேர்வு செய்தல், படம் பிடித்தல், ஒலி ஒளி அமைப்பு ஏற்படுத்துதல் இப்படி பல வேலைகள் திரைப்படத் தொழிலில் உள்ளது.

3. மேலும் படத்தை வெளியிட திரையரங்குகளைத் தேடுதல், பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களுக்கு விளம்பரம் கொடுத்தல் இப்படி எத்தனையோ செயல்களைச் செய்த பிறகுதான் ஒரு படத்தைத் திரையரங்கில் காட்ட முடியும்.
4. இதற்காக உழைக்கும் நூற்றுக்கணக்கானவர்களைத் தேர்வு செய்து வேலை வாங்க வேண்டும். உரிய நேரத்தில் உணவு, ஊதியம் தர வேண்டும்.
5. படப்பிடிப்பு என்றால் பணியாற்ற பலர் தேவைப்படுவர். அவர்களின் குடும்பங்கள் இந்த தொழிலை நம்பித்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன.
6. இவ்வகையில் எண்ணற்ற குடும்பங்களைக் காக்கின்ற தொழிலாகத் திரைப்படத் தொழில் விளங்குகிறது.

19. நடிகர் திலகத்தைக் கண்ட பாலச்சந்திரனின் நினைவலைகளை நயத்துடன் புலப்படுத்துக.

(2020)

1. சிவாஜியின் அழைப்பை ஏற்று மலையாளக் கவிஞர் பாலச்சந்திரன், சிவாஜி கணேசனின் இல்லத்திற்குச் சென்றார்.
2. அங்குள்ள அரண்மனை போன்ற இல்லத்தில் சிவாஜி நடித்த கதாபாத்திரங்களான, வீரம் செறிந்த வீரபாண்டிய கட்டபொம்மன், ராஜராஜ சோழன் போன்ற படங்கள் மற்றும் சிற்ப வேலைப்பாடுகள் இருந்தன.
3. கம்பீரமான தோற்றத்துடன் கைகளை வீசி, ராஜராஜ சோழனைப் போலவே நடந்து வந்த சிவாஜியைக் கண்டு கவிஞர் வியந்து வணங்கினார்.
4. கவிஞரிடம் அவரது பின்னணியைக் கேட்டறிந்து மகிழ்ந்த சிவாஜி, தன் இரு கைகளால் கவிஞரைத் தாமாக முன்வந்து வணங்கி மரியாதை செலுத்தினார்.
5. கவிஞருடன் வந்த ராஜுவ்நாத் "உங்களுக்கு நினைவிருந்தால் கட்டபொம்மன் படத்தின் ஒரு வசனத்தை எங்களுக்காகப் பேசிக் காட்ட முடியுமா?" என்று கேட்டார்.
6. "தலையே போனாலும் மறக்க முடியுமா?" என்று கட்டபொம்மன் வசனத்தைப் பேசி, நாற்காலியில் கம்பீரமாகவும் ஆக்ரோஷமாகவும் அமர்ந்து, தன் நடிப்புத் திறமையை வெளிப்படுத்தினார்.
7. சிவாஜியின் எளிமை, கலை மீதுள்ள பற்று, மற்றும் பாசமான உபசரிப்பு ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட கவிஞரின் மனத்தில் சிவாஜியின் நினைவுகள் நீங்கா இடம்பிடித்தன.

20. சென்னையில் உள்ள மயிலாப்பூர் கந்தகோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?

மயிலாப்பூரின் சிறப்பு:

1. சென்னையின் தென்பகுதியில் அமைந்துள்ள "மயிலை" என்னும் மயிலாப்பூரில் பங்குனி உத்திரவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.
2. திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில் இதனைத் "திருமயிலைப் பதிகம்" எனப் பாடிச் சிறப்பித்துள்ளார்.
3. கபாலீச்சரக் கோவிலின் பங்குனி உத்திரத் திருவிழா சிறப்புமிக்கதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கந்தக்கோட்டம்:

4. சென்னையின் வடக்குப் பகுதியில் கந்தக்கோட்டம் அமைந்துள்ளது.
5. இராமலிங்க அடிகளார் "தெய்வமணிமாலை" என்னும் தொகுப்பில் இதனைச் சிறப்பித்துள்ளார்.
6. வள்ளலாரின் ஆன்மீகச் சிந்தனைகளுக்கு ஊற்றுக்கண்ணாக விளங்கிய இடமாகும்.

21. நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

(2024, 2025)

1. உயர் பதவிகளில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பது சாத்தியமில்லை. ஆனால் திறமைசாலிகள் யாரென்று அறிந்து அவர்களை அருகில் வைத்துக் கொள்ள வேண்டும்.

2. தெரிந்திருப்பது ஒரு வகை அறிவு என்றால் யாருக்குத் தெரியும் என தெரிந்திருப்பது மற்றொரு வகை அறிவு
3. இக்கருத்தையே நாலடியாரும் "கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின் நல்லறிவு நாளுந் தலைப்படுவர்"என்ற பாடல் வரி மூலம் கூறுகிறது.
4. நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும்.
5. வரவைத் தாண்டி நிறைய செலவு செய்பவன் அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுவான்.
6. ஔவையாரும் நல்வழியில், "ஆன முதலில் அதிகம் செலவானால்" என்ற பாடல் மூலம் நிதியைக் கண்டபடி கையாள்பவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

22. எச்.ஏ. கிருட்டினனார் 'கிறித்துவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக. (2020)

1. கம்பர் வான்மீகியின் இராமாயணத்தைத் தழுவி எழுதியதைப் போன்றே எச். ஏ.கிருட்டினனாரும் ஜான் பன்யனின் "தி பில் கிரிம்ஸ் புரோகிரஸ்" என்னும் நூலைத் தழுவி இரட்சணிய யாத்திரிகத்தை எழுதியுள்ளார்.
2. கம்பர் எழுதியதைப் போன்றே எச். ஏ கிருட்டினனாரும் 'விருத்தம்' என்ற பாவகையால் இரட்சணிய யாத்திரிகத்தை எழுதியுள்ளார்.
3. காப்பிய சிற்றுறுப்புகளாக கம்பரும் படலத்தைப் பயன்படுத்தினார். எச். ஏ கிருட்டினனாரும் காப்பிய சிற்றுறுப்புகளாக படலத்தையே பயன்படுத்தினார்.
4. சந்தப் பாடல்கள் கம்பருக்குச் சொந்தம் அதுபோலவே சந்தப் பாடல்கள் பாடுவதில் எச். ஏ. கிருட்டினனாரும் வல்லவர்.
5. கருத்தான உவமைகளைக் கையாளுவதில் கம்பர் வல்லவர். அதுபோலவே எச். ஏ கிருட்டினனாரும் கருத்தான உவமைகளைக் கையாளுவதில் வல்லவர்.
6. இதனால்தான் எச். ஏ கிருட்டினனார் "கிறித்துவக் கம்பர்" எனப் போற்றப்படுகிறார்.

23. 'கோடை மழை' கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக. (2023, 2025)

1. சாந்தா தத்தின் "கோடை மழை" சிறுகதையில் முதியவர் ஆறுமுகம் தள்ளாத வயதில் பச்சிளம் குழந்தையைத் தனி ஆளாக வளர்த்து வந்தார்.
2. காய்ச்சலால் அவதிப்படும் குழந்தையை மருத்துவமனைக்குத் தூக்கிக்கொண்டு சென்றார். அங்கு தாயோடு இருக்கும் குழந்தையின் காட்சியைக் கண்டு தன் காலத்துக்குப் பிறகு குழந்தை துன்பப்படக்கூடாது என்று எண்ணினார்.
3. மருந்துக்கடை ஊழியர் பாபுவிடம் தன் நிலையை விளக்கி, அக்குழந்தையைத் தத்துக்கொடுக்க ஏற்பாடு செய்தார்.
4. முதியவர் ஆறுமுகத்தின் துயரத்தைக் கண்ட மருந்துக்கடை ஊழியர் பாபு, தனக்குத் தெரிந்த, குழந்தை இல்லாமல் இருக்கும் தம்பதியிடம் கூறி, குழந்தையைத் தத்தெடுக்க ஏற்பாடு செய்தார்.
5. தத்தெடுக்க வந்த தம்பதியினர், குழந்தையோடு சேர்த்து ஆறுமுகம் தாத்தாவையும் தத்தெடுத்து, மனிதநேயத்தின் மேன்மையை வெளிப்படுத்தினர்.
6. தாய் தந்தையை இழந்த பச்சிளம் குழந்தையையும், முதியவரையும் ஆதரித்த தம்பதியரின் செயல் மனிதநேயத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

---

24. மாற்றுச் சான்றிதழ் (TRANSFER CERTIFICATE) வேண்டி விண்ணப்பம் (2026)

அனுப்புநர்

மாணவர் பெயர் : ம. செல்வராஜ்
தந்தை / பாதுகாவலர் பெயர் : ச. மணிகண்டன்
முகவரி : எண்.10 முல்லைத் தெரு,
செங்கல்பட்டு. 603001.

பெறுநர்

தலைமையாசிரியர் அவர்கள்,
அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளி,
செங்கல்பட்டு.

ஐயா,

பொருள் : மாற்றுச் சான்றிதழ் வேண்டுதல் – சார்பு

நான் தங்களது பள்ளியில் 2025 – 2026 கல்வி ஆண்டில் பதினோராம் வகுப்பு படித்துள்ளேன். எனது மேற்படிப்பிற்காக, வெளியூருக்குக் குடிபெயர்ந்து செல்வதால் எனக்கு மாற்றுச் சான்றிதழை வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி !

இப்படிக்கு,
உண்மையுள்ள மாணவன்,
ம. செல்வராஜ்.

விவரக்குறிப்புகள் :

1. பள்ளியில் பயின்ற வகுப்பு : 11–ஆம் வகுப்பு
2. பயின்ற கல்வி ஆண்டு : 2025 – 2026
3. EMIS எண் : XXXXXXXXXXX
4. சேர்க்கை எண் : XXXXXX
5. அலைபேசி எண் : XXXXX XXXXX
6. ஆதார் எண் : XXXX XXXX XXXX

இடம் : செங்கல்பட்டு,
நாள் : 04.05.2026.

மனப்பாடப் பாடல்கள் வினா எண் 47 (அ)

இயல் 1: தன்னேர் இலாத தமிழ்

தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் (2025)

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

– தண்டி

பா வகை: நேரிசை வெண்பா

இயல் 2: நெடுநல்வாடை

மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்.

–நக்கீரர்

பா வகை: நேரிசை ஆசிரியப்பா

இயல் 3: கம்பராமாயணம் (2020)

1. துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்புஉளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்

–கம்பர்

பா வகை: கலி விருத்தம்

---

2. குகனொடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்

மகனொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன்அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

–கம்பர்

பா வகை: அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

இயல் 4: **காவியம்**

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.

– பிரமிள்

சிலப்பதிகாரம்

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடிநின்று இசைத்தது ஆமந்திரிகை

– இளங்கோவடிகள்

பா வகை: ஆசிரியப்பா

இயல் 5: **தெய்வமணிமாலை** (2026)

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமை பெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியாதிருக்க வேண்டும்.

– இராமலிங்க அடிகள்

பா வகை: பன்னிரு சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

இயல் 6: **இரட்சணிய யாத்திரிகம்**

பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.

– எச். ஏ. கிருட்டிணனார்

பா வகை: அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

திருக்குறள்கள் வினா எண்: 47(ஆ)

இயல் 2:

அது – என முடியும் குறள்:

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

படும் – என முடியும் குறள்:

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

அரிது – என முடியும் குறள்: (2022)

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

நன்று – என முடியும் குறள்:

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

வரும் – என முடியும் குறள்: (2025)

மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

மகற்கு – என முடியும் குறள்: (2026)

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

சினம் – என முடியும் குறள்:

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

சுடும் – என முடியும் குறள்:

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

மிகும் – என முடியும் குறள்:

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்.

இயல் 4:

அறிவு – என முடியும் குறள்:

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

நோய் – என முடியும் குறள்:

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

பிற – என முடியும் குறள்:

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

செயல் – என முடியும் குறள்: (2020)

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

உடைத்து – என முடியும் குறள்:

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

தொடர்பு – என முடியும் குறள்:

வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

சிறுமை – எனத் தொடங்கும் குறள்:

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதுஒன்று இல்.

துஞ்சினார் – எனத் தொடங்கும் குறள்:

துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.